திராவிடநாடு

21—8—60 | வார வெளியீடு | விலை 16 காசு

# இப்படி இருக்குது ஏராளம்

[ தமிழ்க்கனல் ]

பட்(டு)என்று சொல்லுகிறார்: எதனை யம்மா?
பரிவோடுநான் கட்டுதற்கு வாங்கித் தாம்மா!
தொட்டதில்லை நான்கூட! பார்த்த துண்டு!
நாமெல்லாம் கட்டுதற்கா நெய்தார்? இல்லை!
லட்(டு)என்பார்; சிலேபிஎன்பார்: எதனை யம்மா?
இலக்குமணன் பேர்சொன்னான்! வாங்கித் தாம்மா!
லட்டினைநான் பார்த்திருப்பேன்! தின்ற தில்லை:
(இ)லம்பாடி நமக்கில்லை அவைகள் எல்லாம்!!

அஞ்சுரூபா நோட்டென்பார் எதனை யம்மா?
அதைஎனக்குக் காட்டம்மா பார்ப்ப தற்கு!
நெஞ்சுலரப் 'பிச்சை'என அலைகின் றோமே!
நம்கைக்கு எட்டிடுமோ அஞ்சு ரூபா?
கொஞ்சநேரம் மோட்டாரில் அமர்ந்து போகக்
கூடாதா என்றுமனம் ஏங்கு தம்மா!
பஞ்சைகள்நாம்! மோட்டாரோ பணக்கா ரர்க்கு!
பாவிகளாம் நமக்கில்லை! ஆசை வேண்டாம்!!

எத்தனையோ வீடுகள் இங்(கு) இருக்க நாமும்
ஏன்ஒன்றில் போயிருக்கக் கூடா தம்மா?
இத்தரையும் வானமும்சேர்ந் தது,நம் வீடு;
இதுபோன்ற வீடெல்லாம் நமக்கா? இல்லை!
உத்தமராம் கடவுள்எனச் சொல்வார் அம்மா;
ஒருநாள்நான் காணவேண்டும்: எங்கே யம்மா?
மொத்தமுத லாளிக்கே சொந்தக் காரர்!
மடிந்துவரும் ஏழைகளைக் காண மாட்டார்!!

# "இங்கிருப்பதைவிட...?"

**ஆர். வி.**

நடு நிசி. மணி பன்னிரண்டு. பொன்னன் மினுக் மினுக்கென்ற விளக்கு ஒளியில் தறி நெய்து கொண்டிருந்தான். அவன் மனைவி அமுதா பக்கத்து மேடை ஒன்றில் நூல் சுற்றிக்கொண்டிருந்தாள். அவர்கள் பெற்ற அருமைச் செல்வங்களான மணப்பருவத்தில் இருக்கும் பாவை, சின்னவள் திலகா, பாண்டியன், சேரன்—இவர்கள் கிழிந்த பாய் ஒன்றில் தூங்கிக்கொண்டிருந்தனர்.

பொன்னனின் கரங்கள் இரண்டும் தறியை இப்படியும், அப்படியும் இழுப்பதிலே சுறுசுறுப்புடன் இருந்தன. அவனது விழிகள் இரண்டும் இழைகள் செல்லும் போக்கைக் கண்காணித்தன. அவனது கால்கள் இரண்டும் தறியை இயக்க ஏறி இறங்கிக்கொண்டிருந்தன. அவனது அங்க உறுப்புக்கள் யாவுமே தறியை இயக்கிக்கொண்டிருந்தன.

அவனது பார்வை எதிரே படுத்துறங்கும் அவன் பெற்றெடுத்த செல்வங்கள்மீது திரும்பியது. கிழிந்த பாய்; அதிலே அவனது வாரிசுகள் நால்வர்; தோற்றத்திலே பளபளப்பு இல்லை; தலையிலே எண்ணெய்ப் பசை இல்லை, உடலிலே நல்ல ஆடை இல்லை; கிழிந்த ஆடை; அதிலே ஒட்டு—இதனைக் கண்ட அவன் உள்ளம் குமுறியது!

இப்பொழுது அவனது சிந்தனை தறியைப்பற்றி ஓடவில்லை! அவன் எதிர் காலத்தைப்பற்றி—அவன் பிள்ளைகளைப்பற்றி—அவன் வாழ்வைப்பற்றி ஓடின! அந்தச் சிந்தனை வளர வளர அவன் இரத்தம் சூடேறியது! நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஓடியவன்போல் அவன் நெஞ்சம் துடித்தது! நெய்த தறியை அப்படியே விட்டுவிட்டுத் தறியின்மீது தலையைச் சாய்த்தான! பக்கத்தில் நூல் சுற்றிக்கொண்டிருந்த அவன் மனைவி அமுதா—கணவனின் இந்தக் காட்சியைக் கண்டவுடன் எழுந்து அவனிடம் படபடப்புடன் ஓடி வந்தாள்!

"அத்தான்! நெய்யாமல் ஏன் இப்படி என்னமோபோல் உட்கார்ந்திட்டிங்க! நெஞ்சு வலியா? கொஞ்சம் 'டீ'ன்னு சூடாகப் போட்டுக்கொண்டு வரட்டுமா?"

"அமுதா! அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்! நெஞ்சு வலியுமில்லை, ஒன்றுமில்லை!;'

"பின் ஏன், என்னமோபோல உட்கார்ந்திருக்கிங்க?"!

"சிந்தனைதான்!"

"என்ன அத்தான்! அப்படிச் சிந்தனை?"

"இப்படி இரவும் பகலுமாக நெய்துகிட்டு இருக்கிறோமே, நமக்கு விடிவு காலம் வருமான்னு சிந்திச்சேன்!"

"அத்தான்; தன் நம்பிக்கை இல்லாவிட்டால் வாழவே முடியாதுன்னு நீங்கதானே சொல்லுவீங்க! இப்ப ஏன் இப்படிப்பட்ட சிந்தனை எல்லாம்!,'

"தன் நம்பிக்கை இல்லாவிட்டால் மனிதன் வாழமுடியாது என்பது உண்மைதான்! ஆனால்—அந்தத் தன் நம்பிக்கை யாருக்கு வேண்டும் என்பதுதான் பிரச்சினை!"

"என்ன சொல்றீங்க?"

"பத்துப்படி ஏறி, இருபதாவது படி ஏறவேண்டிய நிலையில் இருப்பவனுக்குத்தான் தனநம்பிக்கை வேண்டும்! முதல்படியே ஏற முடியாதவனுக்கு தன்நம்பிக்கை இருந்து என்ன செய்ய முடியும்!"

"அப்படி என்றால்...!"

"நம்ம நிலை, முதல்படியே ஏற முடியாத நிலைதான!"

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை! கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லுங்கள்!"

"அமுதா! சொன்னால் உன் மென்மையான உள்ளம் தாங்குமா என்றுதான அஞ்சுகின்றேன்!"

"அப்படி என்றால் உங்கள் துன்பத்தில் எனக்குப் பங்கில்லையா, அத்தான்!'

"அமுதா! உன்னுடைய இந்த வார்த்தைகள் என் உடலையே சிலிர்க்க வைக்கின்றன! சொல்லி விடுகிறேன்! ஒன்றும் புதுமையான செய்தி அல்ல! நம் குடும்பத்தைப் பற்றியவைதான்!"

"என்ன அத்தான் அது?"

"பெரிய பெண், பாவை திருமணத்திற்குத் தயாராகி இருக்கிறாள்! சின்னவள் திலகா திருமணப் பருவத்திற்கு வருகிறாள்! பெரியவன் பாண்டியன் ஐந்தாவது படிக்கிறான்! சின்னவன் சேரன் மூன்றாவது படிக்கிறான்! பெண்களுக்கு மணம் முடிக்கவேண்டும்! ஆண்களைப் படிக்க வைக்கவேண்டும்! இவர்களைப்பற்றிய சிந்தனைதான் என்னை வாட்டி வதைக்கிறது! இவர்களின் எதிர்காலத்தைப்பற்றித்தான் எனது கவலை எல்லாம்!"

"மரம் வைத்தவன் தண்ணீர் விடாமலா போய்விடுவான். அது அது நடக்கவேண்டிய நேரத்தில் நடக்காமலா போகும்!"

"அமுதா! இப்படிப்பட்ட சிந்தனையில் நீ இருப்பதால்தான் உன்னால் கவலையில்லாமல் குடும்பத்தை நடத்திச் செல்ல முடிகிறது! ஏதோ கவலையின்றி வேலையில் ஈடுபட்டுவிடுகிறாய்! என்னால் அப்படி முடியவில்லையே! இந்தச் சிந்தனை வந்துவிட்டால்—வாழ்க்கையே வேம்பாகி விடுகிறது! வேலையில் மனமே நாட்டம் கொள்வதில்லை!"

"அத்தான்! இப்படிப்பட்ட நேரத்தில்தான் தனநம்பிக்கை வேண்டும் என்பார்கள்!"

"அந்த நம்பிக்கை இருந்ததால்தான் இவ்வளவு நாள் வாழவே முடிந்தது! இப்பொழுது அந்த நம்பிக்கையே செத்துவிட்டது அமுதா! நமது பெண்களை நல்ல இடத்தில் மணம்செய்து பார்க்க வேண்டும்—ஆண்களைப் படிக்க வைக்கவேண்டும்—அவர்கள் நல்வாழ்வைக் காணவேண்டும் என்கிறபோதுதான் எதிர்காலமே கேள்விக் குறியாகத் தெரிகிறது! நமக்கு எங்கே அப்படிப்பட்ட நல்ல வாழ்வு கிடைக்கப்போகிறது!

இரவு என்றும், பகல் என்றும் பாராமல் நெய்தும் நம் வயிற்றுப்.

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 19 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (21—8—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 6

# பொருந்தா வாதம்

> "நான் உங்களை மதிக்கிறேன், உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். அது போலவே நீங்களும் எங்களை மதியுங்கள்; எங்கள் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்"

இவ்வாறு குடியரசுத் தலைவர் பாபு இராசேந்திர பிரசாத் அவர்கள், சென்னையில் நடைபெற்ற சுதந்திர நாட் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

அவர் இன்னும் வெளிப்படையாகவே சொன்னார்,

> "நாங்கள் உங்கள்மீது இந்தியைத் திணிப்பதில்லை என்று உறுதி கூறுகிறோம். அது போலவே நீங்கள் (தென்னகத்திலுள்ளவர்கள்) எங்கள்மீது ஆங்கிலத்தைத் திணிக்காதீர்கள்"

என்பதாக. இவ்வாறு குடியரசுத் தலைவர் பேசியதற்குக் காரணம், எங்களிடம் (தென்னக மக்களிடம்) ஆங்கிலத்தை வடவர்மீது திணிக்கும் அதிகாரம் இருக்கிறது என்று எண்ணியதால் அல்ல. அப்படியொரு அதிகாரம் தற்சமயம் எங்களிடம் இல்லை. இதனை, மற்றவர்களைவிடக், குடியரசுத் தலைவர் என்ற முறையில் அவர் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார். என்றாலும் தமிழ் மக்களிடத்தில் தாம் கொண்டுள்ள மதிப்பையும் அன்பையும் காட்டிக் கொள்ளும் முறையில் இவ்விதம் பேசியுள்ளார் என்றே கருதுகிறோம்.

ஆனால், ஒன்றை மட்டும் இங்கு தெளிவாக்க விரும்புகிறோம். ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில், அதனை, ஒருவர்மீது இன்னொருவர் திணிப்பதற்கு, அது, இந்நாட்டு மொழிகளுள் ஒன்றல்ல. எனவே 'திணித்தல்' என்ற முறை ஆங்கிலத்தைத் தீண்ட முடியாது.

ஆங்கிலம் உலகப் பொது மொழி என்ற நிலைமைத் தானாகவே— எந்தவித திணிப்பு முறையுமின்றிப் பெற்றுவிட்டது. எனவே, அது உலகின் ஒரு கூறாக விளங்கும் இந்த உபகண்டத்துக்கும் பொது மொழியாக—அதாவது ஒருவரோடொருவர் பழகுவதற்கும், அதனையொட்டித் தொடர்பு கொள்வதற்கும், அத்தகைய தொடர்பு நாட்டின் பொது விவகாரங்களை எவ்வித இடையூறுமின்றிப் பேசித் தீர்த்துக் கொள்வதற்கும் ஆங்கிலம் பெரிதும் பயன்படுகின்றது என்ற முறையில்தான், அது, இன்றுபோல் என்றும் நிலைத்திருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக இந்த துணைக்கண்டத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் இந்தி திணிக்கப்படுவதுபோல், ஆங்கிலம் திணிக்கப்படும் ஒரு மொழியல்ல என்பதை மீண்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்,

எனவே, ஆங்கிலம் திணிக்கப்படுகிறது, ஆகையால் அதனைக் கைவிடுங்கள், நாங்கள் இந்தித் திணிப்பைக் கைவிடுகிறோம் என்று கூறப்படும் பொருந்தா வாதத்தைக் கைவிட்டு, இந்தி திணிக்கப் படமாட்டாதென்பதை, அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் வாயிலாக உறுதிப்படுத்துவது, இன்றைய மொழித் தகராறை எளிதாகத் தீர்த்துக்கொள்வதற்குப் பெரிதும் வழி கோலுவதாகும்.

குடியரசுத் தலைவர் சென்னைக் கூட்டத்தில் குறிப்பிட்டதுபோலச், சமயமும் தேவையும் ஏற்படும் போது அரசியல் சட்டம் திருத்தப்படக்கூடியதே என்பதைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக அரசியல் சட்டத்தைப், பிரதமர் நேரு அவர்களும், குடியரசுத் தலைவரும், உள்நாட்டமைச்சர் பந்த் அவர்களும் சென்னை நிதியமைச்சர் அவர்களும் தந்த உறுதி மொழிகள் காப்பாற்றப்பட்டுத் தமிழ் மக்கள் திருப்திப்படும் வகையில், திருத்தி அமைப்பதே முறையாகும்.

> "இப்பொழுது ஜனாதிபதியும், பிரதம மந்திரியும், மத்திய உள்துறை மந்திரியும் இந்தி தெரியாதவர்களின் சம்மதமின்றி அம்மொழி புகுத்தப்படமாட்டாதெனத் தெளிவுபடுத்திவிட்டனர். ஆனால் ஏற்கெனவே ஜனாதிபதி விடுத்த அறிக்கை வேறுவிதமாக அமைந்திருப்பதால் அதைத் தற்போதைய உறுதி மொழிக்கு ஏற்பத் திருத்துவது அவசியமென்று எண்ணுகிறோம். இவ்வுறுதிமொழிக்கு இணக்கமான முறையில் அரசியல் சட்டத்தைத் திருத்தியமைப்பது இந்தி பேசாதவர்களுக்கு இன்னும் திருப்தியளிக்கக்கூடியது. இந்தி மத்திய அரசாங்க மொழியாவதற்கு வேண்டிய அளவு வளம்பெற இன்னும் பல வருஷங்களாகும். அதைத் தாய்மொழியாகக்கொண்ட ராஜ்யங்களிலேயே அதை அரசாங்க மொழியாக்கக் கூசுவதன் பொருளை விவரிக்கத் தேவையில்லை. அம்மொழி பக்குவம் பெறும் வரை ராஜ்யங்களிடையும், அவைகளுக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையேயும் ஆங்கில மொழி மூலமே தக்க தொடர்பு இருந்து வர முடியும். அத்தொடர்பைத் தளர்த்துவது நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைக்கும்."

இவ்விதம் "சுதேசமித்திரன்" 17—8—60-ல் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதையும் இங்கு எடுத்துக்காட்டுவதன் வாயிலாக நமது கோரிக்கை சிலர் கருதுவதுபோல—ஒரு குறிப்பிட்ட கட்சிக் கண்ணோட்டத்தோடு அணுகப்படுவதல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

பிரச்சினை தீரவில்லையே! பிள்ளைகளுக்கு வயிறு நிறையச் சோறு போடமுடியவில்லையே! உடுத்த நல்ல துணி இல்லையே! இதை எல்லாம் எண்ணும் பொழுதுதான் எதிர்காலம் ஒரே இருளாகக் காட்சி தருகிறது!"

"அத்தான்! பாடுபடும் நமக்கு நல்ல வாழ்வு கிட்டாமலா போகும்-என்றாவது ஒருநாள்!"

"அமுதா! இப்பொழுது மட்டும் நாம் பாடுபடவில்லையா? நாளெல்லாம் நூல் சுற்றவில்லையா நீ? உன் பிள்ளைகள் பொழுதெல்லாம் தார் சுற்றவில்லையா? இரவு பகல் பாராமல் விலா எலும்பு தேயத்தேய நெய்யவில்லையா நான்? இன்னும் எப்படிப் பாடுபடச் சொல்கிறாய் அமுதா! சொல்லு!

என் பெண்கள் நல்ல இடத்தில் வாழவேண்டும்; என் ஆண்குழந்தைகள் படித்துப் பெருமையோடு விளங்கவேண்டும்! என்ன செய்யச் சொல்லுகிறாய் — அவர்கள் நல்வாழ்வுக்காக-அவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகப் பாடுபடக் கரங்கள் துடிக்கின்றன! எப்படிப் பாடுப்பட்டால் அந்த நல்ல வாழ்வு கிட்டும்! சொல்லு அமுதா! சொல்லு!"

"........!"

"உன்னால் சொல்லமுடியாது அமுதா! சொல்லமுடியாது! இப்படிப்பட்ட நிலையில் நாம் மட்டும் அல்ல இன்று! நம்மைப் போன்று ஆயிரமாயிரம் குடும்பங்கள் இத் தங்கத் திருநாட்டில் பரவிக்கிடக்கின்றன! அவர்கள் விழியைப் பார்த்தால் தெரியும் வறுமையின் கொடுமை! வாழ்வின் அவல நிலைமை! நம்பிக்கையில்லா எதிர்காலமற்ற தன்மை! என்ன செய்வோம் என்று ஏங்கும் பான்மை!

"நாளெல்லாம் எலும்பு தேயப் பாடுபட்டு நெய்கின்றோம் நாம்! நமக்கு இல்லை வாழ்வு! நம் உழைப்பிலே விளைந்த சேலைகளை, வேட்டிகளை, சோலிகளை—விலை பேசுகின்றான் முதலாளி! அவன் உலவுகின்றான் உப்பரிகையில்! எலும்பு தேயப் பாடுபடவில்லை அவன்! நாளெல்லாம அவன் மனைவி மக்கள் உழைக்கவில்லை! பாடுபட்டது நாம்! விலை பேசியவன் அவன்! அவனுக்குப் பெயர் முதலாளி! நமக்குப் பெயர் தொழிலாளி! அவன் உண்பது பருப்புச் சோறு! நமக்கோ பழையசோறு! இராப்பட்டினி பகல் பட்டினி என்ற நிலை!! உழைத்தவனுக்கு வாழ்வு இல்லை! பெருமை இல்லை!! அவன் உழைப்பிலே கொழுத்தவனுக்கு உண்டு வாழ்வு! உண்டுபெருமை! உழைத்தவனுக்கு 'வாடா' 'போடா' என்ற சிறுமை! சோம்பேறிக்கு 'வாங்க' 'போங்க' என்ற பெருமை!

"அமுதா! இதை எல்லாம் எண்ணும் பொழுதுதான் இரத்தம் கொதிக்கிறது! சிந்தையில் புரட்சித் தீ சுடர் விடுகிறது! ஏன் இந்த நிலை என்ற கேள்வி எழுகிறது!"

"அத்தான்! வாழக் கொடுத்து வைத்தவர்கள் அவர்கள்! நாம் பாடுபடவே பிறந்தவர்கள்!"

"இந்த எண்ணம் நிலவுவதால் தான் பாட்டாளி பாட்டாளியாகவே வாழ்கிறான்! முதலாளி முதலாளியாகவே வாழ்கிறான்!"

"அத்தான்! நீங்கள் மனம் குழம்பி இருக்கிறீர்கள்! பேசாமல் படுத்துக்கொள்ளுங்கள்."

"அமுதா! படுத்தால் மட்டும் தூக்கம் வந்துவிடும் என்று நினைக்கிறாயா? நான் நல்ல தூக்கம் தூங்கி எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன!"

"ஒரு வேண்டுகோள் அத்தான்!"

"என்ன?"

"இனிமேல் இரவு நேரத்தில் நான் நெய்வதாக முடிவுகட்டி விட்டேன்."

"எதற்காக? நான் படும் துன்பத்திற்காகவா? அல்லது நம் வாழ்வு உயரும் என்பதற்காகவா?"

"எப்படிவேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்!"

"அமுதா! உனக்கென்ன பயித்தியமா? நாளெல்லாம் ஓடாய் உழைக்கிறாய்! இப்பொழுது இந்தத் தொல்லை ஏன் உனக்கு? இயந்திரத்திற்குக்கூட ஓய்வு கொடுத்தால்தான மீண்டும் இயங்கும்!"

"அத்தான்! இந்தக் கஞ்சியையாவது சாப்பிட்டுவிட்டு நீங்கள் பேசாமல் படுத்துக்கொள்ளுங்கள்!"

"இப்படிப்பட்ட நிலை இனி நமக்குக் கூடவே கூடாது அமுதா! இதற்கு ஒருமுடிவு கட்டியாகவேண்டும்!"

* * *

படுக்கையில் கிடந்த பொன்னனுக்குத் தூக்கம் வரவில்லை! நல்ல உழைப்பாளிதான் பொன்னன். உடலிலே பழுது எதுவும் இல்லைதான்! இருந்தும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை! தொழிலாளிகளுக்கேகிடைத்த அரியசொத்துத் தூக்கம்தான்! அந்தத் தூக்கத்தைக்கூட அவன் அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை! காரண…

வறுமையும், கவலையும்தான் அவன் தூக்கத்தைக் குலைத்தன! மனைவியிடம் உரையாடிய பிறகும் அவனது சிந்தனைத் தீ அணையவில்லை! அது மேலும் கொழுந்துவிட்டு எரிந்தது! இறுதியில் ஒரு முடிவில் வந்து நின்றது! அது: "இங்கிருப்பதைவிட இறப்பதே மேல்" என்ற முடிவில் நின்றது!

இறப்பது என்பது அவனைப் பொறுத்தமட்டில் 'இன்பமுடிவு' என்பதுதான். ஆனால்—

அவன் இறந்தால் அவனுக்குப் பின் அவன் குடும்பம் என்ன நிலையில் இருக்கும்? இந்தக் கேள்வியில்தான் அவன் எண்ணங்கள் சுற்றிச்சுற்றி அலைந்தன! அவன் இறந்துவிட்டால் அவன் குடும்பம் எப்படி இருக்கும் என மனக்கண்ணால் பார்த்தான்! அவன் மனக்கண்ணில் அவன்பெற்ற அருமை மகள் அழகுபாவை வந்தாள்!

எண்ணெய்ப் பசையற்ற சுருண்ட தலை; கிழிந்துபோன அழுக்கடைந்த சேலை, ஒட்டுப் போட்ட சோலி; விழியிலே மண வாழ்வு கிடைக்குமா? என்ற கேள்விக்குறி! இந்த நிலையில் பெரிய… மகள் பாவை!

"அப்பா! என்னை இந்த நிலையில் —என்னை வாழவைக்காமல் இப்படிப்பட்ட முடிவைத் தேடிச்செல்ல… எப்படியப்பா தங்களுக்கு மனம் வந்தது?" — என்று பாவை… தந்தையின் பிணத்தைப்பார்த்து… கேட்கும் கேள்வியும், கண்ணீ…ருடன் கதறும் காட்சியையும் காண்கிறான்.

அடுத்து—

சின்னவள் திலகா, பாண்டியன், சேரன் — இவர்கள் 'அப்பா செ…துப் போய்விட்டாரே' என்று தே… அழும் காட்சிகள்!

அடுத்து—

அவன் மனைவி அமுதா! அழ… ஓவியம்! அறிவுக்குன்று! அவ… மனக்கண்ணில் வந்தாள்!

"அத்தான்! எப்படி அத்தா… இந்த முடிவை ஏற்கத் துணிந்… கள்? எங்களை எல்லாம் வி… விட்டுப்பிரிய எப்படி அத்தான் மன…

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

21—8—60.

தம்பி !

வேதனை கப்பிய நிலையில் இந்தக்கிழமை, உன்னுடன் அளவளாவ இயலுமா என்பது பற்றியே, எனக்கு ஐயப்பாடு இருந்து வந்தது. நமது மாநிலத்துக்கு வெளிப்பகுதிக்கு நாலு நாட்கள் சென்றுவரவேண்டி இருந்தது. சென்னை புறப்படு முன்புதான், தொலைபேசி மூலம், தம்பி கருணாநிதி, குடந்தையிலே நேரிட்ட கோரச் சம்பவம் குறித்துக் கூறக்கேட்டேன்—உள்ளம் துடித்தது; பறந்து வந்தேன்; நிலைமைகளை விளக்கிக் கூறினர், நண்பர்கள். குடந்தை சென்று நேரடியாகவே தகவல்களைக் கேட்டறிந்து வருவதாகக் கருணாநிதியும், தர்மலிங்கம் எம். பி. அவர்களும், கூறிச் சென்றனர். தகவல் கிடைத்ததும், அறிந்ததை உரைத்திடவும், ஆவன செய்வதற்கு முயற்சி எடுத்திடவும் காத்துக் கிடக்கிறேன்.

ஒன்று பொதுவாகக் கூறுவேன்—நமது கழக வளர்ச்சி கண்டு, அரசியல் வட்டாரங்களிலே எழுந்துள்ள பொறாமை, பகை உணர்ச்சியாகி, தீயதோர் தீச்சுழல், தமிழகமெங்கும், நமது கழகத்தைச் சுற்றி வளையமிட்டது போலிருக்கிறது, என்பதை நான் உணருவது போலவே நீயும் உணர்ந்திருக்கிறாய் என்று எண்ணுகிறேன். இது, ஒவ்வொரு அரசியல் கட்சியும், அதிலும் குறிப்பாக விடுதலை இயக்கம், எதிர்பார்த்துத் தீரவேண்டிய கட்டம்.

நம்மை அலட்சியப்படுத்தினர் அரசியல் மாற்றார்கள்—நாடு நம்மை எதிர்கொண்டழைத்தது. சான்றோர் என்ற சிறப்புப் பெயருக்கேற்ப, இயல்பு பெறவேண்டிய சிலர், நிலைகெட்டதால் நினைப்புக்கெட்டு, நம்மைச் சபித்தனர்—நாடு நம்மை வாழ்த்தலாயிற்று. பேதமும் பிளவும் மூளும்; பிய்த்தெறியலாம் என்று எண்ணினர் சிறுமதி கொண்டு பெருநோக்குடையாரைச் சாய்த்திட எண்ணிடும் சதிமதி தெரிந்தோர்—நாமோ தணலைத் தங்கம் பயன்படுத்திக்கொள்ளும் தன்மைபோல, எதனையும் நமக்கு ஆக்கம் தரவல்லது ஆக்கிக்கொண்டுவிட்டோம்.

இனி, இவர்களைச் செல்வாக்கற்றவர்களாக்குவதும் செயலற்றவர்களாக்குவதும் இயலாது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டதால், நம்மை உயிரற்றவர்களாக்கி விடுவது என்று துணிந்து, தாக்கவும் தகர்க்கவும், குத்தவும் வெட்டவும், கொல்லவும், ஏவிவிடும் அளவுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

தம்பி! உயிரற்றவர் என்பதை, பிணம் என்று பேசுகிறோம். ஒருவன் செத்தால், உயிரற்றவனாகிறான் என்று பொதுவாகக் கூறும்போது அது உண்மைதான்—ஆனால் சாவு வேறு, உயிரற்றுப்போவது என்பது வேறு.

# ......காலம் இல்லை, அதிகம்!

தத்துவம் பேசுவதாக எண்ணிக்கொள்ளாதே, தம்பி! உண்மையை உரைக்கிறேன்.

சாகாமலே, உயிரற்றவர்களாகிவிட்டவர்கள் உண்டு!

செத்து, உயிரூட்டம் தருபவர்கள் உண்டு.

முன்னவர், கொள்கைப் பற்றற்று, வாழ்க்கைச் சுவையில் மூழ்கி, நாடு, மொழி, இனம் மறந்து கிடக்கும் உருவாரங்கள். உயிர் இருக்கும், உண்ண உறங்க, உறவாட, உரையாட, பொருள்தேட, நடமாட! ஆனால் இனம் வாழ, நாடு மீடுநடைபோட, மொழி வாழ, வழி வகுத்திடவேண்டும் என்ற உணர்ச்சி, துடிப்பு, செயலார்வம் அற்றுபபோயிருக்கும்.

அவர்தான், உள்ளபடி, உயிரற்றார்.

கொள்கைக்காகவே வாழ்ந்து, கொடியவரின் கொடுவாளுக்கோ, வஞ்சகரின் வீச்சுக்கோ, அடக்குமுறையின் கோரப் பற்களுக்கோ இரையாகி இறந்துபடும், மாண்பினர், உயிரற்றோர் எனும் பட்டியலில் அல்ல, உயிரூட்டம் தருவோர் வரிசைக்குத் தங்களை உயர்த்திக்கொள்கிறார்கள் என்பதுதான் நாம் போற்றிடத்தக்க பேருண்மையாகும்.

அந்த வரிசையில் ஏற்கனவே, நிரம்ப இடம் பெற்றனர், நமது கழகத்தவர். இனி அந்த வரிசை வளரவேண்டும், என்று, வஞ்சகர்கள், விரும்புகிறார்களோ என்று எண்ணத்தக்க விதமான நாசகால நடவடிக்கைகள் நாள்தோறும் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

இது, என்னைப் பொறுத்தவரையிலும், என் போன்ற இயல்பினரைப் பொறுத்தவரையிலும், எதனை உணர்த்துகிறது எனின், எந்த நேரத்திலும், எந்த முறையிலும், உயிர்குடிக்கும் பகை நம்மைத் தாக்கி மாய்த்திடக்கூடும்; எனவே, உள்ள நேரத்தை, விரைந்தும் துணிந்தும், முறைப்படுத்தியும் மூலம் கெடாவகையிலும், பயனுள்ள தாக்கிக் கொளளவேண்டும்; எத்தனை நாள் இந்தப்பணியாற்ற விட்டுவைக்கப் பட்டிருப்போம் என்பதே பிரச்சினையாகிவிட்டிருப்பதனால், கிடைக்கும் வாய்ப்புகளைச் செம்மையாகப் பயன்படுத்தி, வீழ்த்தப்படுமுன், வீரப்பணியாற்றினேன! என்று நாம் நமது நெஞ்சத்துக்குக் கூறிக்கொள்ளத்தக்க நிலை பெற்று, பிறகு, நிற்பவரிடம் வீழ்வோர், அறப்போர் ஆர்வத்தை, விடுதலை வேட்கையை, ஒப்படைத்துவிட்டு, இவர் என்னினும் செம்மையாகச் செயல்படவல்லார்! என்ற மகிழ்ச்சியுடன், மண்ணில் சாய்ந்திடவேண்டும், என்பதுதான்.

**வேலை நிரம்ப இருக்கிறது** என்றேன், சென்ற கிழமை—தம்பி! அத்துடன் இதனை இணைத்துக்கொள், **காலம் அதிகம் இல்லை!**

வேலை நிரம்ப இருக்கிறது, காலம் அதிகம் இல்லை—எனினும், சிக்கலன்றோ அதிகப்படும் என்று, சிந்தை குழம்பிக்கிடந்திடும் சிற்றினம் அல்ல, திராவிட இனம்.

**வேலை நிரம்ப இருக்கிறது—காலம் அதிகம் இல்லை—எனினும் உறுதிக்குக் குறைவேதுமில்லை** — என்பதுதான் முழு உண்மை.

அத்திமரம் கண்டிருக்கிறாயே, தம்பி! மரம் எத்துணை பெரிது—அதிலே காய்த்திடுவது எத்துணை சிறிது! காண்கிறாயல்லவா? அளவுக்காக மட்டுமல்ல, தம்பி! அதனைக் காட்டுவது. மிக எளிதிலே 'சொத்தை'யாகிடத்தக்கது என்பதனையும் கூறத்தான். 'அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை' என்பது பழமொழி. நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது, அதனை அல்ல; மரம்பெரிது, காய்மிகச் சிறிது.

பூசணைக்கொடி பார்க்கிறாயே, தம்பி! எப்படி இருக்கிறது, உலர்ந்து, சுருண்டு, கீழே வீழ்ந்துகிடக்கிறது—ஆனால் காயோ! மிகப் பெரிது!

அத்திமரத்தினையும், பூசணைக்கொடியினையும் கண்டறியாதாரிடம், அத்திக்காயினையும், பூசணைக்காயையும் காட்டி, பிறகு மரத்தையும் கொடியையும் காட்டினால், அத்தியைப் பூசணைக்கொடியுடையது என்றும், பூசணைக்காயை அத்திமரம் தந்தது என்றும் கூறுவரன்றோ.

நாம் செயலாற்றிப் பெற்ற சாதனைகள், தம்பி! கொடியிலே காணப்படும் பூசணை போன்றது. காணாதார், நம்பமாட்டார்கள்! கண்டோர், வியப்படையாதிருக்கமாட்டார்கள்.

அத்திமரத்திலே காய்த்துக் கிடக்கும் கொத்துக்கொத்தான காய்கள்போல, காங்கிரஸ் கட்சியினர், ஆட்சி மன்றங்களிலே, எண்ணிக்கை பலத்துடன் அமர்ந்துள்ள்னர். இப்போது அந்தப் பழமொழியை நினைவிற்குக் கொண்டு வா, அத்திப்பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை.

அப்படியொரு அத்திப் பழத்தைப் புட்டு, சொத்தை எவ்வளவு என்று பார்த்துக்கொண்டிருந்தனர், பெங்களூரில், நான் சென்றபோது—ஜட்டி அமைச்சர் அவை எதிர்ப்பாளர்கள் கிளப்பிய புகார்கள்பற்றிய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கர்நாடக வணிகக் கோட்டப் பெரியவர் ஒருவருடன் உரையாட வாய்ப்புக் கிடைத்தது—அவர் அந்த 'அத்திப்பழ' வேலையாக வந்திருந்தார். அவரிடம, நமது கழகம் செயலாற்றி வருகிற பான்மையினையும், பெற்ற வெற்றிகளையும் எடுத்துக்கூறும்போது, அவர், கொடியிலே, காணப்படும் பூசணைக்காயைத்தான் எண்ணிக்கொண்டிருந்திருப்பார். ஏனெனில் நான் சொல்லச் சொல்ல அவர், இவ்வளவு வேலை நடக்கிறதா? இத்துணை வலிவு இருக்கிறதா? இவ்வளவு ஆதரவு பெருகி வருகிறதா? என்று வியப்புடன் கூறியவண்ணம இருந்தார்.

நல்லவர் மனதிலே வியப்பும், நாடாள்வோர் மனதிலே விசாரமும், ஏற்படுத்தும் நமது நிலைமை, அழித்தொழிக்கும் முறையை அறமென்று எண்ணிக்கொள்ளும் அளவுக்கு மனம் அழுகிக் கிடப்போருக்கு, பகை உணர்ச்சியைத்தான் ஊட்டும்—அதன் விளைவுதான், நமக்கு அவ்வப்போது ஏற்படும், விபத்துகள்.

இவை இனி ஏற்படாது என்ற உத்தரவாதம் தரத்தக்க பெருங்குணமோ, பேராற்றலோ கொண்டதாக அரசு இல்லை.

ஆனால், ஒன்று, இவைகளைத் தாங்கிக்கொள்ளும் நெஞ்சுரம் இல்லை என்று கூறிடும், வலிவிழந்தான் எவனும் இங்கு இல்லை.

வெட்ட வருவோனை வீழ்த்தவாகிலும் உரிமை வழங்கலாகாதா என்று வீரம் கொப்பளிக்கும் நிலை

(12-ம் பக்கம் பார்க்க)

# அந்திக்கலம்பகம்

**வாடி, வத்சலா!** நூறு ஆயுசு உனக்கு.

எதற்கு? என்னைப் பிடித்தாட்டற தரித்திரம், நான் இல்லையானா வேறு எங்கே போகும்னா?

கஷ்டம் எல்லோருக்கும்தான் ஏற்படும்; குறையும்; வளரும்; அதற்காக உயிரையே விட்டுவிடுவதா?

ஏண்டி **ஏமலதா!** உனக்கு என்னடி தெரியும் கஷ்டத்தைப்பத்தி! டெப்டி கலெக்டர்மக; ஆபீஸருக்கு பாரியா!.., யாரது? அடடா! நம்ம... இவ...

எவ? அடடே! வாடிம்மா, ஏது அத்திபூத்ததுபோல என் பாளே அதுபோல இருக்கே...... சௌக்யமா, அதைச் சொல்லுடி முதல்லே.

**பொன்னம்மா!** நெஜமாச் சொல்றேன, உன்னைப்பார்க்கணும் பார்க்கணும்னு, பத்து நாளா நினைப்பு—வேலை — ஓய்வு இல்லை — எப்படி இருக்கறே...

நானும் இங்கே வரணும் வரணும்னு எண்ணிக்கொண்டுதான் இருந்தேன்...வேலைத் தொந்தரவுதான்...

கச்சேரிக்குக்கூட வரக்காணோமே ...உங்க ஆத்துக்காரர் வந்திருந்தார்—பார்த்தேன் — அவர் என்னைப் பார்த்தாரோ, இல்லையோ...

பார்த்ததாச்சொன்னார்... அடையாளம் தெரியலையாம் முதல்லே...

ஆமா! இவதான் வாரத்துக்கு ஒருசுத்துப்பெருத்துண்டு வர்ராளே!

நான் என்னடிம்மாசெய்ய? எனக்கும், பாரமாத்தான் இருக்கு.

ஆமா, அதிககனமாகாமெ இருக்க என்னமோ, மருந்து இருக்காமே...

சொல்றா! ஆனா, எப்படி நம்பறது. ஒண்ணுகிடக்க ஒண்ணு செய்து தொலைச்சா, யார் படறது ......

அதுவும் உண்மைதான். இந்தக் காலததிலே, ஆயிரத்தெட்டு மருந்துப் பேர் சொல்றா. எல்லாமே ஔஷத்தி என்றுதான் பேசறா...

எல்லாம் விளம்பரம்...

ஆமா, விளம்பரம் நோடீசெல்லாம் இப்ப ஒட்டப்படாதாமே, சுவர்களிலே.....

அப்படி ஒரு சட்டமாண்டி....

அதுக்கும் சட்டம் வந்தாச்சா!

**சி. என். ஏ.**



மனுஷர் வாழற வழிக்கு ஒரு சட்டம் செய்யமாட்டா. மத்தததுக்கெல்லாம் சட்டம் செய்யறுளாம், சட்டம்.

ராஜாஜிகூட அதைத்தானே சொல்லிண்டிருக்கார்—தலைப் பாடா அடிச்சிண்டிருக்கார்—தொட்டதுக்கெல்லாம் சட்டம் சட்டமனு போட்டுத் தொலைக்கா திங்கன்னு.........அவர் பேச்சை, யார், கேட்கறு? இதோ, நம்ம பொன்னி இருக்காளே, இவளுக்கே பிடிக்காது.........

ஆமாம்! நான் இல்லைன்னு சொல்லலியே. உப்புக்குப் பயன் படாத சட்டம் போடப்படாது என்பது ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். அதை நான் மறுக்க மாட்டேன். அதுக்காக, எல்லாம் தன்னாலே நடக்கும்னு விட்டு விட்டா, வலுத்தவனெல்லாம் அவனவன் இஷ்டப்படி காரியம் செய்து மத்தவர்களை வாட்டி வதைப்பான். சட்டம், அதைத் தடுக்கத்தான்.

அதுக்குச் சட்டம் ஏண்டி, பொன்னி! தர்மம் நிலைக்கவேணும் என்கிற எண்ணம் இருந்தா போதும். பழைய காலத்திலே அப்படித்தான் அரசாண்டா! இப்ப இன்னதுதான் சாப்பிடலாம் என்பதிலிருந்து, இத்தனை குழந்தைதான் பெற்றுக்கலாம் என்று சொல்றவரையிலே சட்டம் வந்தாச்சி......ஏண்டி சிரிக்கிற! நான் சொல்றது தப்பா? சட்டம் பெருத்துப்போச்சி—தர்மம் படுத்துப்போச்சு.

இதுக்கு என்னடி சொல்றே, பொன்னம்மா!

கேட்க நல்லாத்தான் இருக்குது. ஆனு, தர்மம், தர்மம்னு சொன்னு எங்கு தா? ஒவ்வொரு காலத்துக்கு ஒவ்வொருத்தர் ஒவ்வொண்ணைத் தர்மம்னு சொல்லியிருக்கிறது தெரியுது. முன்னே இருந்த தர்மம், என்னை இந்தவீட்டுக்கு உள்ளேயே நுழையவிடாது—பாபம் வந்து உங்க எல்லோரையும் பிடித்துக்கொள்ளும்—தீண்டாதவளுக்கு என்ன திமிர் பார்த்தாயான்னு கூவிக்கொண்டு இன்னேரம், தடியும் தாம்பும் தூக்கிக்கொண்டு திமுதிமுன்னு ஓடிவந்திருக்கமாட்டாங்களா, உதைக்க, அடிக்க.

இப்ப எதுக்கு, எப்பவோ இருந்துவந்த காட்டுமிராண்டிக் கதையைச் சொல்லணும்.

காட்டுமிராண்டித்தனம் எப்படிப் போச்சி? சட்டம் வந்ததாலேதான்.

புத்தி வந்ததாலே போச்சின்னு சொல்லு, பொன்னம்மா!

புத்தி வந்தது—பிறகு சட்டம் வந்தது. அதனாலே, எதெதற்குச் சட்டம் போட்டாகணுமோ, அததற்குப் போடத்தான் வேணும். ஒரேயடியா, சட்டம்போட்டுக் காரியம் செய்யறதே தவறுன்னு சொல்லலாமா?

அவ, சொல்றதிலேயும் உண்மை இருக்கு. ஆனு, இந்தக் காலத்திலே இதை இதைச் செய்யணும்னு சொல்றதைவிட, இதை இதைச் செய்யக்கூடாதுன்னு சட்டம் போடறதும், தடை போடறதும், நிறைய வளர்ந்திண்டு இருக்கு.

இதை இதைச் செய்யணும்னு சொல்லிச் சொல்லி, யாரும் கேட்டு நடக்க முன் வராவிட்டா, சட்டம் போடத்தானே வேண்டி வரும்.

எனக்கென்னமோடிம்மா, சட்டம் சட்டம்னு பேசிண்டு, தர்மத்தை நாசமாக்கிடப்படாது என்ற கவலைதான்.

தர்மம் இருக்கத்தான் வேணும்—ஆனு அது, பொதுவானதா, எல்லோருக்கும் நல்லது செய்வதாக இருக்கவேணும். மத்தவர்களை மட்டந்தட்ட, அடக்கி வைக்க, தர்மம் தர்மம்னு பேசினு, எப்படி அதை ஒப்புக்கொள்ள முடியும், சொல்லுங்க. நேத்து எங்க பக்கத்து வீட்டிலே, இதே விஷயத்தைப்பத்தி, பலமான விவாதம்.

உங்க பக்கத்தாத்திலேயா! அப்பொ, விவாதம் பேச்சோடு நின்னு இராதே!!

நாம, கேலிசெய்கிறோம் அந்த வீட்டு நடவடிக்கையைப்பத்தி நாடு மட்டும் என்ன வாழுதாம். விவாதம்னு, அடிதடி வரைக்கும்தான் போய் நிற்குது. அதுகிடக்கட்டும்; தகராறு எதனாலே என்பதல்லவா முக்கியம்!

சொல்லு! சொல்லு! எதனாலே தகராறு வந்தது?

தர்மோபதேசம் செய்தார் கணவன் — மனைவி அதை ஏற்றுக்கொள்ள மறுத்தாள்—அவ்வளவுதான், பேச்சு வளர்ந்தது...

அடித்திருப்பான், அவன்தான் அக்ரமக்காரனுச்சே. பாவம் அந்தப்பெண் அழுதிருப்பாள், அலறித்துடித்து. தலைமுழுகாமலிருப்பதாகக்கேள்வி.

எனக்கும் கேள்விதான்—ஆறோ ஏழோ...

குழந்தைகளா...?

—போடி குறும்புக்காரி! ஆறும் மாசமோ, ஏழோன்னு சொன்னேன். பொன்னம்மா! நீ சொல்லு ...தகராறு என்ன?

கொஞ்சக் காலமாகவே அவன் வாங்கும் சம்பளத்தைத் தருவதில்லையாம்......இராத்திரி வீடுவர மணி பன்னிரண்டோ, ஒன்றோ கூட ஆகிவிடுமாம்...பாவம்! அந்தப் பெண், வெளுத்ததெல்லாம் பால் என்று இருப்பவள். வேலை அதிகம்னு சொன்னதை நம்பி விட்டாள்—வயிறெரிந்து பேச வாளாம் ஆபீசில் உள்ளவர்களை ......பாவிகளுக்கு ஈவு இரக்கமே இல்லையா தா? இப்படி வேலை வாங்குகிறார்களே — என்று. சரியான ஏமாளி இவள் என்பதை எண்ணி அவனுக்கு உள்ளூர சிரிப்பு. பத்து ஆள் வேலையை நான் ஒருவனே பார்க்கவேண்டி இருக்கிறது என்பானும்.

உடனே இவள், உபசாரம் செய் திருப்பாள்...

ஆமாம்! கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் என்பார்களே...இவன் விஷயம் மட்டும் வெட்டவெளிச்சமாகாமலாபோகும்...காய்கறி விற்கிறாளே கன்னி, அவசொல்லி இருக்கிறு, தெரியுமா அம்மா உன் வீட்டுக்காரர் விஷயம், மாந்தோப்புத் தெருவிலே இருக்கிறாளே ஒருத்தி மைக்கண்ணி; அவ வீட்டிலே கதின்னு இருக்கிறார் என்பதை —எப்படி இருக்கும் எல்லாருக்கும் கணவனைக் கேட்டா. அவ்வளவு தான், தர்மோபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டான். மட்டுமரியாதை, பயபக்தி இருக்கவேண்டும்...எதிர்த்துப் பேசவே கூடாது......உத்தமி என்று பேர் எடுக்கவேணும். பத்தினிக்கு இலட்சணம் அது... அப்படின்னு,......எல்லம்மா காலில் கூட விழுந்து கேட்டாளாம், இப்படி மாதிரி செய்யாதிங்க. எனக்கு வேதனை வேகவைக்காதிங்க. இது குடும்பத்தையே அழித்துவிடுமுங்க. நான் இப்ப இருக்கிற நிலையிலே இதுக்கு அதிர்ச்சி இருக்கக்கூடாதுங்க...என்றெல்லாம்.

அவ, மனம் என்ன பாடுபட்டுதோ, பாவம்...!

இந்தநிலையிலே இப்படிச் செய்திங்கன்னு அவ சொன்னு, இவன் என்ன சொன்னும் தெரியு

பதில்... இந்த நிலையிலே நீ இதை எல்லாம் கண்டுகொள்ளக் கூடாதுன்னு...

'அடப்பாவி! எவ்வளவு அக்ரமமான பேச்சு...

அவளும் மனம் கொதித்துப் போய், பாவின்னுதான் சொல்லி விட்டா...

சொல்லமாட்டாளே, எல்லம்மா. ரொம்பப் பொறுமைசாலியாச்சே.

தன்னைச் சொல்லிக்கொண்டா... அவனை அல்ல... பாவி நான் ஏன் போன வருஷம் டைபாயிட் ஜுரம் வந்தபோதே செத்திருக்கக்கூடாதுன்னு....

அப்பக்கூட அவனுக்கு மனம் இளகலே...

அப்பதான் ஆத்திரம் வந்தது. இவ்வளவு தூரத்துக்குப் பேசக் கத்துக்கொண்டாயா... திமிர், தலை வரைக்கும் ஏறிவிட்டதா...போகுது போகுதுன்னு பார்த்தா, வரம்பு மீறிப் போறயா...என்னென்னமோ பேச்சு, அடி, உதை...... பாவம், உரக்க அழுதா, அண்டை பக்கம் தெரிந்துவிடப் போகுதேன்னு, அவ குமுறிக்கொண்டே இருந்தா ......

இப்படி இருக்குது பெண்களோட வாழ்வு. இதை யார் கேட்கிறார். எது எதெதற்கோ, கட்சிகள் இருக்குது. இந்தக் கொடுமை, உலகம் தோணின நாளா இருந்துகொண்டிருக்கு. இதைப்போக்க எந்தக் கட்சிக்கு எண்ணம் ஏற்படுது...

எப்படி ஏற்படும்? எல்லாக் கட்சிகளையும் நடத்துகிறவங்க, ஆண்கள் தானே...

சிலோனிலே, ஆளும் கட்சியை நடத்துவதே நம்மைபோல ஒரு பெண்ணுமே. முதல் மந்திரி வேலை கூடப் பார்க்கறதா பேப்பர்லே பார்த்தேன்.

ஆமாம், சிரிமா பண்டார நாயகா!

உலகத்திலேயே இப்படி ஒரு பெண்மணி, முதல் மந்திரி வேலை பார்க்கற அதிசயம், வேறே எங்கேயும் கிடையாதாமே. மேனுடு மேனுடுன்னு பெருமை பேசருளே, அங்கேகூடக் கிடையாதாமே.

மந்திரிகளா இருக்கா, ஆனு, முதல் மந்திரியா இருப்பதில்லே.

முதல் மந்திரியாக இருப்பதிலே என்ன மகா கஷ்டம். நம்ம காமராஜர் முதல் மந்திரி வேலை தானே பார்க்கறார்.

ஆமாம்... அவருடைய பிறந்த தினம்கூடக் கொண்டாடினளாமே.

கொண்டாடினு. ஒரு வேடிக்கை தெரியுமோ? எதுவோ ஒரு பேப்பர்லே பார்த்தேன். காமராஜரை கொழந்தைபோல ஏணையிலே போட்டுத் தாலாட்டுப்பாடி ஆட்டிக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு படம்-கேலிப்படம் போட்டிருந்தா. பாட்டு என்ன தெரியுமோ... 'ஏன் பிறந்தாய் மகனே! நீ ஏன் பிறந்தாயோ?' என்று.

குறும்புக்காராடி இந்தப் பேப்பர் காராளெல்லாம்...

அதென்ன ஒரே அடியா அப்படிச் சொல்லிவிட்டே. உலகத்திலே நடக்கிற அதிசயத்தை எல்லாம் கண்டுபிடிச்சு வெளியிடறது பேப்பர்காராளோட வேலை.

ஆனு, சில பேப்பர்களிலே ராசி பலன்கூடப்போட்டுண்டிருக்காளே, தெரியுமோ?

அதை எதற்காக இவர்கள் போடணும். கோடி ஆத்துக் குப்பணய்யங்காரைக் கேட்டா சொல்ருர். பஞ்சாங்கம் இருக்கு, பார்த்துக்கொள்ள. கிணற்றுத் தவளைகள் மாதிரி உள்ள நம்ம நாட்டு மக்களுக்கு, உலகத்திலே எந்தெந்த நாட்டிலே என்னென்ன நடக்கிறது என்பதை எடுத்துக் காட்டி அறிவு வளர வழிசெய்ய வேண்டாமோ? ஒவ்வொரு நாட்டிலே நடைபெற்றுண்டு வர்ர அற்புதங்களைப் படித்துப் பார்த்தா, மயக்கமே ஏற்பட்டுவிடும்.

சந்திரமண்டலத்துக்கு நாம்கூடப் போகலாமாமே. அந்த அற்புதத்தைத்தானே, குறிப்பிட்டுச் சொல்கிரு, இவ.

அதுதான் இப்ப, கிராமத்தாருக்கெல்லாம்கூடத் தெரியுமே. வேறே எத்தனேயோ, அற்புதம ஒவ்வொரு நாளும நடந்திண்டுஇருக்கு. யாரோ ஒருத்திக்கு, ஈரல் கெட்டுவிட்டதாம் — இருபது வருஷத்துக்கு முன்னேன்னு, அது அவளுடைய போருத காலம்னு ஊரார்சொல்வா, உறவுக்காரர், அந்த ஊரிலே ஒருத்தன் இருக்கான், பச்சிலை தருவான், இந்த ஊரிலே ஒருத்தன் இருக்கான், முடிக்கயிறு தருவான, நோய், நொடியிலே போகும்னு சொல்லுவா...

ஆமாமாம்! பலபேர் சொல்கிற யோசனைகளைக் கேட்டு, கண்ட மருந்து சாப்பிட்டு, மாயம் மந்திரம் ஒண்ணுவிடாமப் பார்த்து, கடைசியிலே, பொண்ணே மண்ணுயிடுவா...

எத்தனையோ பேர் அப்படிச் செத்ததுண்டு. கட்டுக்கழுத்தியா இருந்து செத்துப்போயிருந்தா, அவளை 'பூவாடைக்காரி'யாக்கி பூஜை போட்டுக் கும்பிடுவா. இப்ப நான் சொல்லிண்டு வந்தது என்ன தெரியுமோ, ஈரல் கெட்டுவிட்டது, நல்ல நல்ல மருந்து கொடுத்தாலும் நோய் போகவே இல்லை; என்ன நடந்தது தெரியுமோ, கெட்டுப்போன ஈரலையே வெட்டி எடுத்துவிட்டா வெளியே. வேறே என்னமோ இரும்பாலே செய்த ஈரலாம், அதை அந்த இடத்திலே பொருத்திவிட்டார்களாம்......

யார், டாக்டர்கள்தானே?

கேட்கற கேள்வியைப் பார்த்தாயா! உலக்கைக் கொழுந்து என்பாளே, அது நீதாண்டி அம்மா! அந்த மாதிரி காரியத்தை டாக்டர்கள் செய்யாமே, கோயில் பூஜாரியா செய்வா? ஏண்டி, சிரிக்கிறே! இவ கேட்கற கேள்வி, எவ்வளவு அசட்டுத்தனமா இருக்குது பாரேன்.........

அது இடக்கட்டும், அவ பொழச்சாளோ?

பொழச்சி இருக்கிறது மட்டுமா! போன வாரம் ஒரு குழந்தைகூடப் பெற்றெடுத்தா. வலிவான குழந்தைன்னு போட்டிருக்கு, பேப்பர்லே.

இதை அல்லவா, அற்புதம்னு சொல்லவேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களைத்தான் வெளியிட்டு, புத்திக்குத் தெளிவு உண்டாக வழி காட்டணும். அதை விட்டுவிட்டு, அந்தச் சாமியார் ஆறு வருஷமா அன்ன ஆகாரமே சாப்பிடாமல் இருக்கிருர், அவர் பார்வை பட்டாலே பட்டமரம் துளிர்த்துவிடும், மலடிக்குக் குழந்தை பிறக்கும், என்று எதை எதையோ எழுதி எழுதி, மனதைக் குழப்பிவிட்டு விடருளே.

பேப்பர்காரர் போட்டு மனதைக் குழப்பமாக்கி விடுவதை நான் மறுக்கவில்லை. ஆனல், நம்ம நாட்டுப் பெண்கள், மனம், ஏற்கனவே குழப்பித்தானே இருக்குது. அதை மறுக்க முடியுமோ?

அதற்காக, இருக்கற குழப்பத்தை, இவர்களெல்லாம்கூடி, இன்னமும் அதிகமாக்கிவிடுவதுதான், நியாயமா?

சொல்லுவேனு, அப்படி? நான் என்ன சொல்கிறேன் தெரியுமா, நாமெல்லாம் அந்தவிதமான அக்கப்போர் விஷயத்தைக் கண்டா, சுவையாப் படிக்கிறோம், வம்பளந்து வம்பளந்து, ஊர் முழுதும் அந்தச் சேதியைப் பரப்புவதையே வேலையாக்கிக் கொள்கிறோம்.

வெறும் வாயை மெல்லுகிற அவ்வையாருக்கு ஒருபிடி அவல் அகப்பட்டது என்பதுபோல......

ஆமாம்! இப்படிச் சொல்கிறார்களே, இருக்குமா? சொல்கிறவர்கள் யார்? அப்படிச் சொல்லக் காரணம் என்ன? என்று துளியாவது யோசிக்கிறது உண்டா? காளைமாடு கண்ணு போட்டதுன்னு சொன்னு, கம்பத்திலே பிடித்துக்கட்டுன்னு சொல்கிறோம். தூங்கினவன் தொடையிலே, திரிச்சவரையிலே இலாபம்; அதனாலே, அக்கப்போர் கதையை மனம்போன போக்கிலே, எவனெவனோ சொல்லத் துணிவு ஏற்பட்டுவிடுது. உங்களுக்கு, ஒரு சேதி தெரியுமா.........'அம்பாளுடைய அவதாரம்' கோர்ட்டிலே நிற்கிறு, இப்போ.

அதென்னடி பொன்னி! அம்பாளுடைய அவதாரம்!

வடக்கே ஒருத்தி—வாலிபப்பருவம்—அவளை, 'அம்பாளுடைய அவதாரம்' என்று, எவனோ கதைகட்டிவிட்டான். சாட்சாத் அம்பாளே, தான், இந்தப் பெண் வடிவத்திலே வந்திருக்கிறதாக, எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

அது எப்படி ஏற்பட்டது, அந்த நம்பிக்கை?

அந்தப் பெண் நடந்துபோகும்போதே, பாதம் பூமியிலே படுகிறதல்லவா, அது அப்படியே குங்குமக்கலராகிவிடுகிறதுன்னுசொல்லிவிட்டா. பாரேன், பிறகு! ஒரே கூட்டம்தான்! அம்பாளைத் தெரிசிக்கணும், அவகால்பட்ட மண்ணை அள்ளிப் பூசிக்கொள்ளவேண்டும். அவளுடைய 'வரம்' பெறவேண்டும் என்றுஊரேதிரண்டுவிட்டது. ஒருநாள், அந்த 'அம்பிகை' தரிசனம் தரப்போவதாகக் கேள்விப்பட்டு, இலட்சக்கணக்கிலே, கூடிவிட்டா. அது சின்னஞ்சிறு கிராமம். ஒரே அமளி! இடிபட்டு, மிதிபட்டு, பலர் மடிந்தே போனார்களாம்...

பாரேண்டி, அக்ரமத்தை. வரம் கேட்கப்போன இடத்திலே, சாவு அல்லவா, வந்திருக்குது.

இவ்வளவும் நடந்த பிறகுதான், 'அம்பாள் அவதாரத்தை' போலீஸ் கவனிக்க ஆரம்பித்தது. மக்களை மயக்கி, பொய்சொல்லி ஏமாற்றி, பலர் சாவதற்குக் காரணமாக இருந்ததற்காக, அந்த 'அவதாரம்' பேரிலே, வழக்குப் போடப்பட்டது. அம்பாள்மீதா வழக்கு என்று பக்தர்கள் போர்தொடுக்கவில்லை. நான் அம்பாளின் அவதாரம், என்னைத் தொட்டால் சுட்டுச் சாம்பலாக்கிவிடுவேன் என்று அந்த அதிசயப் பெண்ணும் சொல்லவில்லை. வழக்கு நடந்தது .........

நடந்தா, குங்குமம்படியும் என்று சொன்னயே, கோர்ட்டிலே கூட இருந்ததோ...?

ஏமாளிக்கு இப்போதுகூட, என்ன எண்ணம் ஏற்பட்டது, கவனித்தயா! பைத்யமே, பைத்யமே! குங்குமமாவது காலடியிலே இருந்து விழுவதாவது. கட்டுக்கதை!

ஆமாமாம், வீண்புரளி. நீ, சொல்லு. பிறகு என்ன நடந்தது?

அவளா ஒண்ணும் செய்யலே, ஜனங்க தாங்களாதான் ஏமாந்தார்கள் என்றுசொல்லி, அவளைத் தண்டிக்காதபடி விட்டுவிட்டார்களாம். இப்போது, ஒருவரும், அம்பாளைப் பார்த்து வரம்கேட்கப் போகிறதில்லே!

யார், போவா! அதுதான், அம்பாபாரேட தலைதப்பினுப் போதும்னு ஆயிருக்கே, போலீசிலே சிக்கிண்டு.

இதுபோல, பல சமயம் குட்டு வெளிப்படுது, ஆனாலும், மறுபடியும் எங்கேயாவது ஒரு மூலையிலே யாராவது சாது, சன்யாசி, மாந்திரீகன் என்று கிளம்பினு, உடனே, ஓடோடிப்போய், அவன் காலிலே விழுந்து...

...காசு பணத்தைப் பாழாக்கிக் கொள்கிறு...

காசுபணம்கூட இருக்கட்டும்; அறிவே பாழாகிப் போகிறதே...

எந்த இடத்திலே இதுபோல நடந்தது?

வடக்கே! ஒரு கிராமத்திலே. அம்பாளுடைய அவதாரம் என்று சொல்லி ஊரையே ஒரு கலக்கு கலக்கினவ, பதினெட்டு வயதுப் பெண். பெயர் தேவுபா.

அதென்னடி பேர், தேவுபா!

தேவதை என்கிற அர்த்தத்திலே, அப்படிப்பேர், அந்தப் பெண்ணுக்கு.

பதினெட்டு வயசுப் பொண்ணு, ஊர் மக்களை எல்லாம் முட்டாளாக்கிவிட்டா...

அவளாகவா, முட்டாள் ஆக்கிறு. நம்ம ஜனங்களுக்கு அற்புதம் அதிசயம், மகிமை, வரம் என்ற இதுபற்றி எல்லாம் இருக்கிற மயக்கத்தைத் தெரிந்தவங்க, இந்தப் பெண்ணைக் காட்டி, அம்பாளுடைய அவதாரம் என்று கதை கட்டி ஏமாத்திஞங்க. நம்மநாட்டு மக்களுக்குத்தான், நரி பரியான கதை, ஆண்பனை பெண்பனையான கதை, அந்தரத்திலே தொங்கின கதை, ஆலகாலத்தை அள்ளிக் குடித்த கதை, இப்படி ஆயிரமாயிரமாகக் கேட்டுக்கேட்டு, பழகி, ஒரு மனமயக்கம் ஏற்பட்டிருக்குதே...

பொன்னம்மா சொல்றது, நூற்றுக்கு நூறு உண்மைதான்.

அவளோட அப்பாவே சுயமரியாதைக் கட்சியாச்சே! அதனாலே தான் பொன்னிக்கு இதெல்லாம், விளக்கமாத் தெரியுது.

கோயிலுக்குப் போறதில்லே குளத்திலே முழுகறதில்லே, இந்தச் சுயமரியாதைக்காரான்னு கேலி பேசுவயே, இப்ப, என்னடி வத்சலா! பிரமாதமாப் புகழ்ந்து பேசறே, சுயமரியாதைக்காரரானே.

ஏண்டி, உண்மையை யார் சொன்னாலும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே.

ஒப்புக்கொள்வதாகச் சொன்னு மட்டும் போதுமா. காரியத்திலே செய்துகாட்டவேண்டும். எங்கே, செய்யப்போறிங்க. ஆருத்ரா தரிசனம்னு சொன்னதும், சிதம்பரம்!

ஆமாமாம்! ஒரு தேர் திருவிழா விடமாட்டா...

திருவிழாவுக்குப் போனவர்களுடைய கதி என்ன ஆச்சு என்பதைப் படிக்கலியா பேப்பர்லே...

அதென்னடி நடந்திருக்கு சொல்லு, பொன்னி.

மதுராவுக்குப் பக்கத்திலே கோவர்த்தனகிரி இருக்குதே...

மதுரைக்குப் பக்கத்லே, விருது நகர்னு ஊர் இருக்கு, அங்கேதான், புதுசா என்னமோ கூட்ஸ் வண்டிகள் தங்கற இடம் கட்டப்போருன்னு, அவர் சொல்லிண்டிருந்தார். கோவர்த்தனம் அங்கே எங்கே இருக்கு...

நான் சொல்றது, வடக்கே இருக்கிற மதுரை, நம்ம மதுரை இல்லா. அந்த மதுரையை, மத்ரா, மத்ரான்னு சொல்வாங்க. அங்குதான் கோவர்த்தனம் இருக்கு.

கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடிச்சார் கிருஷ்ணன்னு சொல்லுவாளே...

அதே இடம்தான்... 'கோவர்த்தனகிரிதாரி'ன்னு பாட்டுக்கூட ரேடியோவிலே போடுவார்களே...

நம்ம ரேடியோவைத்தானே சொல்றே... அதை யார் கேட்கரு. சிலோன் இல்லேன்னு, அந்த ரேடியோவை, எடுத்து அப்பளம் போட்டுவைக்க வேண்டியதுதான்னு, அவர் சொல்வார்...

பொன்னி! இவ ஒரு இளையை விட்டு இன்னொன்றுக்குத் தாவிண்டே இருப்பா. நீ, சொல்லு கோவர்த்தனம் இருக்கு...

அந்தக் கோவர்த்தனத்திலே ஒரு திருவிழா. அதற்கு ஏகப்பட்ட கூட்டம் கிளம்பி இருக்கு, ஆக்ரா போற இரயிலிலே. இரயில் பெட்டியிலே இடம் கிடைக்காததாலே; பெட்டியுடைய கூரை இருக்கே அதிலே பலர் தொத்திக்கொண்டு, பிர்யாணம் நடத்தினு.

கூரைமீது ஏறிண்டா?

ஆமாம், கோவர்த்தனம் போயாகணுமே... புண்யம் கிடைத்தாகணுமே. போகிறபோது, யமுனை ஆற்றுக்கு ஒரு பாலம் இருக்கு; இரும்புப்பாலம். அதிலே தலை மோதி, இருபத்து ஐந்து பேர், செத்துப்போனதா பேப்பர்லே வந்திருக்கு! போனமாதம்.

இருவத்தி ஐஞ்சி பேரா, செத்துப்போயிருக்கா.

எங்கே இருக்கா! அத்ரான், செத்துப்போனுளே!

வேடிக்கை இருக்கட்டும் ஏமலதா! திருவிழாப் பார்க்கணும்னு கிளம்பி இருவத்தைஞ்சி பேர், செத்துப்போனன்னு கேள்விப்பட்டா, மனசு பதறலியோ...

இந்த விபத்திலே இருவத்தைந்து பேர் மடிந்ததுதான் தெரியுமா, உங்களுக்கு. நான் சொன்னேனே, அமபா அவதாரம், அவனைத் தரிசிக்கப்போன இடத்திலே, மிதிபட்டு இடிபட்டுச் செத்தவர்கள், மொத்தம் அறுவது.

ராம! ராம! அறுவது பேரா' செத்துப்போனு...?

கிருஷ்ணு! கிருஷ்ணு!ன்னு பஜனை செய்துகொண்டு போனவர்கள் தான், இருவத்தி ஐந்து பேர், செத்தார்களே, அவர்கள்.

அனியாயமாத்தாண்டி பொன்னி இருக்குது! இந்தமாதிரி விஷயத்தைக் கேள்விப்படுகிறபோது, தேரும் வேண்டாம் திருவிழாவும் வேண்டாம், பகவானை, அவாளவா இருக்கிற இடத்திலே இருந்தபடியே, பூஜித்தா போதும்னு தோணறது...

தேரும் திருவிழாவும் இந்த நாட்டிலே மட்டுந்தானு இருக்குது. எல்லா நாட்டிலேயும் உண்டு.

ஆமாம்... ஆனு, நம்ம நாட்டிலே நடக்கிற திருவிழா அவ்வளவும், பழைய காலத்துக்கு, நம்மை மறுபடியும் அழைக்கிற ஏற்பாடு. ஒவ்வொரு நாட்டிலேயும் ஒவ்வொரு காலத்திலே, மூடத்தனத்தையே பக்தி என்று எண்ணிக்கொண்டு, அதன்படி, நடவடிக்கைகளிலே ஈடுபட்டதுண்டு. இப்போதெல்லாம், அங்கே எல்லாம்எவ்வளவோ தெளிவு உண்டாகிவிட்டது. அதை மறக்கக்கூடாதே.

நரபலிகூட, கொடுத்திருக்காளாம், அந்த நாடுகளிலே...

ஆமாம், யார் இல்லை என்று சொல்ரு? குடித்துவிட்டுக் கூத்தாடுவது, கண்ட கண்ட பெண்களோடு கூடிக் குலவுவது, இதை எல்லாம் கூடத் திருவிழாவாக, கிரேக்க நாட்டிலே, முன்னுலே, நடத்திக்கொண்டிருந்ததாகச் சரித்திரமே எழுதப்பட்டிருக்கு...

நம்ம நாட்டிலே நடத்தருளே, மதுரைவீரன் பூஜை; அதுபோல இருக்கு......

கிரேக்க நாட்டிலே நடைபெற்ற திருவிழா, இருக்கே, அதைப்பற்றி ஒரு கதை—உருக்கமான கதை ஒன்று படித்தேன்......சொல்லட்டுமா......

சொல்லு, சொல்லு பொன்னி!

குடித்துவிட்டு ஆடுவதும், குளறிக் கூத்தாடுவதும், கண்டகண்ட பெண்களோடு குலவுவதும், காட்டுமிராண்டித்தனம், அறிவற்றவர்கள் செய்யும் அக்ரமம், என்ற பகுத்தறிவு வெற்றி பெருத காலம். கிரேக்க நாட்டிலே, செல்வம் நிரம்பி வழிந்தது. பஞ்சம் பசி பட்டினி தலைகாட்டாத நிலை. இரேக்க நாட்டுப் படைகள் எட்டுத்திக்கிலேயும், வெற்றிகள் பெற்று, கொடிகட்டி வாழ்ந்து வந்தார்கள். மாடமாளிகைகள் கூடகோபுரங்கள்; தங்கக் கலசம் உள்ள கோபுரங்கள்; திருக்குளங்கள்; நவரத்னக் குவியல் நிரம்பிய கோயில்கள்—இப்படி, கிரீஸ் நாடு இருந்தது......

பார்க்கப் பதினுயிரம் கண் வேண்டுமென்பார்களே, அது போல......

அந்தக் இரேக்க நாட்டுக்கு ஆதன்ஸ் என்பது தலைநகரம்.

டில்லிபோலவா ஆதன்ஸ்......

ஏன், வத்சலா! டில்லிதானு, நமக்குத் தலைநகரம். நமக்கு சென்னைதானே, தலைநகரம்.

அவ, எப்படி அதை ஒத்துக்கொள்ளுவா, அவ தம்பி, டில்லியிலே அல்லவா வேலையிலே இருக்கான்......

குறுக்கே குறுக்கே பேசாமலிருந்தாத்தானே, கதையைச் சொல்ல...ஆதன்ஸ் நகரத்திலே ஒரு பெரிய சீமான்—வியாபாரத்திலே கோடி கோடியாகச் சம்பாதித்தான். பெரிய மாளிகை! ஆள் அம்பு!

கொழந்தை குட்டி இல்லையோ, அவனுக்கு...?

ஒரே ஒரு பெண்—பத்தரைமாத்துப் பசும்பொன்னுல் செய்த சித்திரப்பாவை, என்று சொல்வார்களே, அதுபோல.

அப்படித்தான் அழகா இருப்பா. சீமானோட மகன்னுலே, தன்னுலே ஒரு அழகு வந்துடுமேன்னோ?

அவளுடைய அழகுக்கு ஈடாகாது, என்னிடம் திரண்டு கிடக்கும் செல்வம் அவ்வளவும் என்று சீமான் பெருமையாகப் பேசுவான். என் மகளுடைய கண்களைக் கண்ட பிறகு, வைரத்தின் ஒளி எனக்கு மகிழ்வளிக்கவில்லை. அவள் சிரித்தாள், முத்துகள், வெறும் பருக்கைக் கற்களாகிவிட்டன என்றெல்லாம், சீமான் தன் நண்பர்களுடன்

பேசுவான். எப்போதும் கவிதா விற்பன்னர்கள், கலைஞர்கள் இவர்களுடன், பொழுது போக்கிக் கொண்டிருப்பவன். நான் சொன்னேனே, திருவிழா இரேக்க நாட்டில்; அந்தத் திருவிழாக்களுக்குத் தன மகளை அழைத்துக்கொண்டு போவதில்லை, சீமானுக்கு அலாதியான சந்தோஷம்.

ஆமாம், அவனுடைய பெயர் சொல்லவில்லை, அவளுடைய பெயரையும் சொல்லவில்லை......

இரேக்கப் பெயர்களைச் சொன்னு, குழப்பமாக இருக்கும்; அதனாலே சொல்லவில்லை. பெயருக்கு என்ன —வைத்துக்கொள்ளேன், நீயாக ஒரு பெயர்—சீமானுடைய பெயர் கோடீஸ்வரன்—அவளுடைய பெயர் தங்கத்தாமரை—சரிதானு...

ஏண்டி பொன்னி! நீ என்ன கதை சொல்றியா, கதை கட்டறியா?

கதை என்பதே, கட்டுவது தானே. சிறு சிறு உண்மைகளை வைத்துக்கொண்டு, அந்தக் காலம், நிலைமை, இவைகளை விளக்க, பல சம்பவங்களைச் சுவையாகச் சேர்த்துக் கட்டுவது கதை. சரி! இப்படி, குறுக்கிட்டா, கதை முடியாது. தங்கத்தாமரைக்கு பதினெட்டு வயது—அவளுடைய பதினாறுவது வயதிலேயே, அவளுடைய மனம், ஒரு வாலிபனிடம் மயங்கிக் கிடந்தது. அவனும் அழகன். அவ்வளவு பணக்காரனல்ல. ஆனல் அதே வேலையாக இருந்தால், எவ்வளவு பொருள் வேண்டுமானாலும், சம்பாதிக்க முடியும்; அப்படிப்பட்ட திறமைசாலி.

அவனுக்கு என்ன தொழிலோ?

தொழில் எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டான். படிப்பது, சிந்திப்பது, எழுதுவது, மறுபடியும் படிப்பது, இதுதான் வேலை.

படித்துவிட்டு வேலைக்குப் போவது என்பார்கள், இவன் படிப்பதையே வேலையாக்கிக் கொண்டானு......உம்!... சொல்லு சொல்லு.........

அறிவுச்செல்வத்துக்கு ஈடுவேறு கிடையாது என்பது அவனுடைய திடமான நம்பிக்கை. அவனுக்கும் தங்கத்தாமரைக்கும் காதல் வளர்ந்தது. தங்கம்! இன்று திருவிழா! அலங்காரம் செய்துகொள்ளவில்லையா என்று ஒரு நாள் அவள் தகப்பனர் கேட்டார். அவள் 'களுக்' கென்று சிரித்துவிட்டு, அலங்காரம் அதிகம் செய்துகொள்வது எனக்குப் பிடிக்காது அப்பா! என்றாள். ஏன தெரியுமோ? அவளுடைய காதலன அதுபோலச் சொல்லிவைத்திருந்தான். தந்தையும் மகளும திருவிழாவுக்குப் புறப்பட்டார்கள். ஒரு வேலையாள் மேல் மூச்சு வாங்கும நிலையில் ஓடோடி வந்து, தங்கத்தாமரையைப் பார்த்து, திருவிழாவுக்குப் போகாதே, என்றான்.

வத்சலா! உன் வீட்டுக்காரர் வருகிறார்—மோடார் சத்தம் கேட்கிறது—நாளைக்கு, மற்றது கூறுகிறேன்.

அடடா! நம்முடைய அந்திக் கலம்பகம் இந்த அளவோடு நின்றுவிடுகிறதேடி பொன்னி!

நின்றுவிடவில்லை, தொடரும், நான் வருகிறேன்.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

யில் கேட்டிடும் காளையரைக் காண்கிறோமேயன்றி, விரண்டோடும் போக்கினர் எவரும், இந்த நம் அணி வகுப்பிலே நிச்சயம் இல்லை.

அதோ என் மகன்! வீட்டு வாயற்படியிலே சிறிதளவு குனியாவிட்டால் தலை இடித்துக்கொள்ளும், என்று பெருமிதத்துடன் கூறுமதாய், அந்த அடலேறு, தன கருவில் இருந்த மணி என்பதுபற்றி எண்ணிடும்போது ஒரு கணம் வியப்பேயன்றோ தோன்றிடும்! நானு, தாங்கி இருந்தேன், இந்த மாவீரனை, என் கருவில்!!—என்றனறோ எண்ணுவர்.

அஃதேபோல, நமது கழகத்துக்குள்ள, வயது, வரலாறு, வடிவத்தின் அளவு, கிடைத்துள்ள வாய்ப்புகள் இவைகளுடன் நாம் பெற்றுள்ள வெற்றிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெற்ற மகன அடலேறுவை உலவக்காணும், தாய் மனம், நமது கழகத்திற்கு ஏற்படுகிறது.

பெற்ற மகன் தத்தாரியாகிப் போனதையோ, அல்லது நோய்கொண்டோனாகிக் கிடப்பதையோ காண்பவள், அடலேறு போன்ற மகனை ஈன்றவளைக் காணும்போதே, கடுகடுத்த முகத்தினளாவளன்றோ, இழிகுணம் கொண்டோளாக அவள் இருந்திடின்.

அதுபோன்ற போக்கு, ஆளுங் கட்சிக்கு இன்று—நம்மை நோக்குங்கால். இழிகுணம் கொண்டோர், அந்த முகாமில் இடம் பெற்றதால், நம்மிடம் அருவருப்புக் காட்டுவதுடன், அழித்திடவும் முயலுகின்றனர்.

ஆகவேதான் தம்பி! மீண்டும் கூறுகிறேன், வேலை இருக்கிறது நிரம்ப!—காலம் இல்லை அதிகம்!—என்பதை.

உள்ளபோதே, உண்மைக்கு உழைத்திட, ஊராருக்குப் பணியாற்றிட, விடுதலைக் கிளர்ச்சிக்கு விறுவிறுப்பூட்ட, தளராது பணியாற்று. பணி முடியுமுன் பாதகரின சதி, நமமை வீழ்த்தினாலும், ஐயகோ! அதைச் செய்யாது விட்டோமே! இதைக் கவனியாதிருந்தோமே! என்று எண்ணித் துயருறும் நிலையில், நாம இருத்தலாகாது. என கடமையைச் செய்தேன்; குறை வற! நானிருந்தால், தனக்கு வாழ்வில்லை என்று அஞ்சியவன என்னை வீழ்த்துகிறான, நான விடைபெற்றுக்கொள்கிறேன்; வேலை இருக்கிறது நிரம்ப! காலம் இல்லை அதிகம்! என்று கூறிவிட்டு, தொடர்ந்து பணியாற்றும உடன்பிறந்தார்கள் உள்ளனர் அணி அணியாக என்ற எண்ணம், தவழ, உயிரூட்டம் தருவோரின வரிசைக்கு நாம் உயரவேண்டும். அந்த வாய்ப்புப் பெற்றோருக்கு, என் வீர வணக்கம்.

அண்ணன்,

அண்ணாதுரை



# பொன்னித்தீவில் கன்னித்தெய்வம்

அரசி நந்தினி, தான் கனனித் தெய்வத்தோடு ஐக்கியமாகப் போவதை எண்ணிப் பெருமைப் பட்டுக்கொண்டிருந்தாள். வெள்ளிக்கிழமை நெருங்கி வந்தது. நாடெங்கும் அரசி முக்தியடையப் போவதையே மக்கள் பேசினர்.

அன்று வெள்ளிக்கிழமை. விடியற்காலையிலேயே மக்கள் அரண்மனை முன்பாகப் பெருவாரியாகக் கூடிவிட்டனர். இட நெருக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அரசி நந்தினி மாடியினின்றும் எட்டிப் பார்த்தாள் கூடியிருந்த மக்களை. மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம தெரிவித்தனர். பூரிப்படைந்தாள் அரசி!

அரசியின் அவை கூடியது. ஏராளமாக மக்கள் கூடியிருந்தனர். பெருமையோடு வந்து அமர்ந்தார் சாது பஞ்சநாதர். இன்னும் சில விநாடிகளில் மன்னனாகப் போகிறோம் என்ற கர்வததோடு வந்து உட்கார்ந்தான் மந்திரி மச்சநாதன். அரசி வந்தாள். கூடியிருந்தோரெல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர். குருவைப் பணிந்துவிட்டுச் சிம்மாசனத்தில் அமர்ந்தாள். எழுந்தாள், "பொனனித்தீவின் குழந்தைகாள்! கனனித் தெய்வத்தின கருணையால் நான கைலாயம் போகப்போகிறேன் இன்னும் சிறிது நேரத்தில். அதற்கு முன்பாக கன்னித்தெய்வத்தின ஆணைக்கேற்ப இந்நாட்டின் மன்னராக மந்திரி மச்சநாதரை நான் நியமிக்கின்றேன். என்னிடத்தில் நீங்கள் காட்டிய அன்பை அவரிடமும் காட்டிக் கன்னித்தெய்வத்தின் ஆணையைக் காப்பாற்றுங்கள். ஆண்டுதோறும் இந்த நாளில் விழாக்கொண்டாடுங்கள். கன்னித் தெய்வம் உங்களைக் காப்பாற்றுவாள்..."

மச்சநாதர் எழுந்தார். "அரசியார் எனனிடத்திலா இந்த ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கின்றீர்கள்? வேண்டாம் ...வேண்டாம்...எனக்கு இந்தஉலக பந்தமே வேண்டாம். கன்னித் தெய்வத்தோடு கலந்திடும் பாக்கியம் எனக்குக் கிட்டாதா என்றிருக்கின்றேன். எனக்கு மணிமகுடம் வேண்டாம்."

"அமைச்சரே! இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை உம்மிடம் ஒப்படைப்பது என் சொந்த விருப்பத்தால் அல்ல. எல்லாம் தாயின் ஆணை... தட்டாதீர்."

"பலவந்தமாகத் திணிக்கிறீர்கள் ...கன்னித்தெய்வத்தின ஆணை அதுதான என்றால் அதையே ஏற்கின்றேன்."

"நல்லது அமைச்சரே... வாருங்கள் ஆலயம் புறப்படுவோம்."

எல்லோரும் புறப்பட்டனர் வழி நெடுக ஏராளமான மக்கள் கூடி நின்று மலர் தூவினர். மண்டியிட்டு வணங்கினர். ஆராத்தி எடுத்தனர். ஆரவாரம் செய்தனர். மேளங்கள் முழங்க மக்கள், கூட்டம் பின் தொடர அரசி நந்தினி ஆலயம் சென்றாள். சிலையின் முன் நின்றாள். மக்கள் ஆர்வத்தோடு கூப்பிய கரங்களோடு பார்த்து நின்றனர்.

**ப. உ. சண்முகம்**

"கனனித்தெய்வத்தாயே" என்றாள் அரசி. சிலை பிளந்தது. மக்களெல்லாம் ஆச்சரியத்தோடு பார்த்து நின்றனர். மெள்ளச் சிலை திறந்தது. கூடியிருந்த மக்களெல்லாம் "தாயே... கன்னித்தெய்வத் தாயே" என்று கூவினர். அரசி நந்திலி மெள்ளச்சிலையின் அருகில் சென்று அதன் நடுவில் நின்றாள். மெள்ளச் சிலை மூடியது. கூப்பிய கரத்தோடு அரசி நந்தினி மறைந்தாள். கூடியிருந்த மக்களெல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். வலம் வந்தனர்!... வணங்கினர்... வாழ்த்தினர் கன்னித்தெய்வத்தின் நாமத்தை! மேளங்கள் முழங்கின! வெடிகள் அதிர்ந்தன! இவைகளனைத்தையும் பார்த்து நின்றிருந்தான் அதிகமான்! சிறிது நேரத்திற்கெல்லாம் "குருநாதர் பிரத்யோக பூசை" நடத்தப்போவதாகச் சொல்லி மக்களை வெளியேற்றினார்கள். சிறிது நேரத்திற்குப் பின் கோயிலை மீண்டும் திறந்துவிட்டனர். ஏராளமான மக்கள் கன்னித்தெய்வத்தை வழிபட்டுச் சென்றனர்.

ஊரெங்கும் இதைப்பற்றியே நாட்டு மக்கள் பேசினர். அதிகமான் ஆச்சரியமான இச் சம்பவம் குறித்துச் சந்தேகப்பட்டவனாகத் தேன்மொழியின் வீட்டிற்கருகில் உட்கார்ந்திருந்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அயர்ந்து உறங்கிவிட்டான். திடீரென்று "ஐயோ... ஐயோ..." என்ற குரல் கேட்டு அலறி அடித்துக்கொண்டு எழுந்தான். தேனமொழியின்வீட்டிலிருந்து அந்தக் குரல்வரக்கேட்டுச் சனனல் வழியாகப் பார்த்தான். தேன்மொழியாயிருந்த பெண்ணின் கைகால்கள் கட்டப்பட்டுக் கிடந்தாள். தேன்மொழியைக் காணவில்லை! கதவைத் தட்டினான் திறப்பாரில்லை. பின்புறமாக ஓடினான. கட்டப்பட்டிருந்தவளை அவிழ்த்துவிட்டு, "என்னம்மா, என்ன நடந்தது?" என்றான்.

"என் மகளை யாரோ தூக்கிக் கொண்டு போய்விட்டார்களே"... என்று கதறினாள் திலகவதி.

"அந்த அயோக்கியன் மச்சநாதனின் வேலையாகத்தானிருக்க வேண்டும்"

"ஆமாம். அந்த அயோக்கியன் வேலைதான்......"

சொல்லிக்கொண்டே ஓடினான் அதிகமான்.

"மந்திரியா... இவன் மன்னனா? ...ஐயோ தெய்வமே... இவனையா மன்னனாக்கி விட்டாய்... கன்னித் தெய்வமே" என்று அலறிக் கொண்டே வெறிபிடித்தாற்போல் ஆலயம நோக்கி ஓடினாள். திலகவதி.

நடுநிசியில் மச்சநாதன் மாளிகை நோக்கி ஓடின அதிகமான் மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு தகவலும் அவனுக்குக் கிடைக்கவில்லை. கடைசியாக மாளிகையை ஒட்டினாற்போல் இருந்த மரத்தின்மீது ஏறிப்பார்த்தான். தேன்மொழி ஓர் அறையில் அழுதுகொண்டிருக்கக் கண்டான். அவசர அவசரமாக இறங்கி ஓடினான் தேன்மொழியின் வீடுநோக்கி. அங்கே அந்த மாதைக் காணவில்லை. ஆலயம்தான் சென்றிருக்க வேண்டுமென்ற நம்பிக்கையோடு ஓடினான்.

ஆலயம் சென்ற திலகவதி மூடிக்கிடக்கும் கன்னித்தெய்வத்தின் கோயில் முன்பு நின்று கதறினாள்.

"தாயே......என்னை இப்படியா சோதிப்பது?......என்மகளைக் காப்பாற்று...என்மகளைக் காப்பாற்று! நாங்கள் பட்டதெல்லாம் போதாதா?.....அம்மா...அம்மா.... என் மகளைத் தூக்கிச்சென்றவன் இந்நாட்டு மன்னனா? இந்த அயோக்கியனையா நீ மன்னனாக்கினாய்?......தாயே நல்லவர்களுக்கு இவ்வுலகில் இடமேயில்லையா?... என்மகள் என்னகுற்றம் செய்தாள் ... அரசிழந்தேன்... கணவனை இழந்தேன்... இளமையின் இனபங்களையெல்லாம் இழந்தேன்......இன்று என் மகளை இழந்தேன்... அம்மா... அம்மா... கன்னித்தாயே கன்னிப் பெண்ணின் வாழ்வைக்காப்பாற்று ... அம்மா... அம்மா..." என்று கதறிய திலகவதி "யாரம்மா நீ" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஒரு பருவமங்கை நிற்கக்கண்டாள். அவள் வேறு யாருமில்லை, சாது பஞ்சநாதரின் மகள் வஞ்சிதான்!

"யாரம்மா நீ?......ஏன் இப்படி அழுகிறாய்?...உன்மகளுக்கு என்ன நேர்ந்தது"

"இரவு என் மகளை மன்னன் மச்சநாதரின் ஆட்கள் தூக்கிக் கொண்டு போய்விட்டார்களம்மா"

"மன்னரின் ஆட்களா?"

"ஆமாம்..."

"ஏன்"

"தெரியவில்லையே"

"நிச்சயமாக அரண்மனை ஆட்கள் தானா?"

"நிச்சயமாக அவர்கள் தான்"

மச்சநாதன் ஆலயத்தினுள் தன்னைத் தேடிவருவதைப் பார்த்தாள் வஞ்சி. திலகவதியை ஒருபுறமாக மறைந்திருக்கச் சொல்லி விட்டுத் தன் காதலனை வரவேற்றாள்.

ஆலயத்திற்கு ஓடிவந்த அதிகமான் மச்சநாதனைத் தொடர்ந்து வந்து மறைந்து நின்றுகொண்டான்.

"வாருங்கள் வேந்தே" என்றாள் வஞ்சி!

"ஏன்......ஒரு மாதிரியாக இருக்கிறாய்"

"நான் எப்படியிருந்தாலென்ன? உங்கள் காரியம்தான் மங்களகரமாக முடிந்துவிட்டதே"

'நீ என்ன சொல்கிறாய்?'

'நான் சொல்லிக்கேட்கின்ற நிலையில் இன்று நீங்கள் இல்லை. நான் மணம்வீசும் முல்லையாக இருந்தேன். முகர்ந்தீர்... இனிக் குப்பை மேட்டில் வீசி எறியப்படவேண்டிய சருகுதானே நான்'

'செச்சே......அப்படியெல்லாம் எண்ணாதே'

'எண்ணியதில்லை இன்றிரவு வரை'

'நீ என்ன சொல்லுகிறாய்?'

'ஆமாம்... உங்கள் மாளிகைக்கு மாடப்புறா ஒன்று வந்துள்ளதே! அதைச் சுவைக்கவில்லையா'

'மாடப்புறுவா?'

'இல்லை......ஆடும்மயில் என்று தான் வைத்துக்கொள்ளுங்களேன்'

'ஆடும்மயிலா?'

"இல்லை இல்லை...தேன்சிட்டு"

"தேன் சிட்டா?"

"அதுதான் உங்கள் மனதிற்குப் பிடித்த மனோரஞ்சிதம்".

"மனோரஞ்சிதமா?...வஞ்சி நீ என்ன சொல்கிறாய்"

"இன்னுமா புரியவில்லை?...... அதுதான்......சற்று நேரத்திற்கு முன்பு......உங்கள் ஆட்கள்...... தூக்கி வந்தார்களே......ஒரு மடக்கொடியை........"

"ஆ!........."

"ஏன்?......பயமாயிருக்கா?"

"பயமா?"

"அதுதானே கேட்டேன். பயமெல்லாம் நேற்றோடு தெளிந்து விட்டிருக்கவேண்டுமே......இன்று தாங்கள் மன்னரல்லவா?...எனக்கேன் பயப்படப்போகிறீர்கள்?"

"வஞ்சி!"

"வஞ்சி, வஞ்சியென்று கொஞ்சிய காலம்போய் இன்று அதிகாரத் தொனியில் அலட்டுகிறீர்........ வேண்டாம்...நான் சொல்வதைக் கேளுங்கள். பெண்களை, சுவைத்ததும் விட்டெறியும் சக்கை என்றெண்ணிவிடாதீர்கள். காலப் போக்கிலே நீங்கள் பயிரிட்ட காதல் கருகிப் போகலாம், உங்கள் கருணை கிடைக்காமல். ஆனால் உங்களையும் என்னையும் பிணைத்து வைத்திருப்பது காதல் மட்டுமல்ல, பல பயங்கர இரகசியங்கள். அதற்காகவாவது நான் சொல்வதைக் கேளுங்கள். இன்றிரவு சிறை எடுக்கப்பட்ட பெண்ணை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்."

"வஞ்சி!"

"அஞ்சிடுவேன் என்று எண்ணாதீர்"

"யாரோடு பேசகிறாய் என்பதை மறந்துவிட்டாயா?"

"உம்மை மன்னராக்கியது நான் என்பதை மறந்துவிடாதீர்"

"வஞ்சி"

"உங்கள் இரகசியங்கள் வெளியாவதற்கு முன்பு......"

"உன்னைத் தொலைத்தே தீர வேண்டும்" என்று கூறிக் கட்டாரியை அவள் மார்பில் சொருகினான். துடிதுடித்துக் கீழே சாய்ந்துவிட்டாள் வஞ்சி. இதைப்பார்த்த திலகவதி அவளையுமறியாது கூச்சலிட்டுவிட்டாள். அதைக்கேட்ட மச்சநாதன் தன் முகத்தை மூடிக் கொண்டு ஓடிவிட்டான்.

திலகவதி ஓடிவந்து வஞ்சியைத் தூக்கி உட்கார வைத்தாள். உயிருக்குப போராடும் அவள் மெள்ளப் பேசினாள். அதுவரை மறைந்[திருந்த] அதிகமான் நெருங்கிவந்தான்.

"அம்மா...நான் இனிப் பிழைக்க மாட்டேன். அதற்கு முன்பு இங்கு நடந்த இரகசியங்களை உன்னிடம் சொல்லிவிடுகிறேன்... இதை உல[கிற்கு] நீ சொல்லிவிடு. இந்த ஆ…

ம் ஒரு கள்ளச் குகை. இராணி
க்தி அடையவில்லை. கன்னித்
தய்வம்போல் வேஷம் போட்டு
மாற்றியது நான்தான். அவளைக்
கான்று ஆலயத்தின் வடபுறம்
தைத்திருக்கிறான் இந்த அயோக்
ன். இவனும் என் தந்தை பஞ்ச
தரும் சேர்ந்து செய்த சதி.
தோ அந்த அறையின் உள்ளே
ள்ள கருவியை சுழற்றினால் இந்
சிலை திறக்கும். இதை வைத்
க்கொண்டுதான் இராணியை
மாற்றி விட்டார்கள். உன்
களை... உன் மகளை... காப்...பா"
லை சாய்ந்துவிட்டது. திலகவதி
பருந்திகைப்படைந்தவளாய் வஞ்
யின் மார்பில் புதைந்திருந்த
டாரியை எடுக்க முயன்றாள்.
ர்கள் அவள்மீது கொலைக்
ற்றம் சாட்டிக் கைது செய்தனர்.

மச்சநாதன் தன் மாளிகை சென்
தும் அவன் கையாள் ஏதோ
வன் காதில் சொன்னான்.
பாஷ்' என்று கூறிக்கொண்டே
தாள அறைநோக்கி ஓடினான்.

கை கால்களில் விலங்கிட்டுக்
க்கும் சாது பஞ்சநாதரைக்
ண்டான். வெற்றிச் சிறப்புச் சிரித்
ன் மச்சநாதன்.

"மச்சநாதா... இதெல்லாம் உன்
லைதானா?...... நான் உனக்கு
ன்ன துரோகம் செய்தேன்?"



"பஞ்சநாதா...! உலகில் குற்றவாளிகள் மட்டுந்தான் தண்டிக்கப் படுகிறார்களா?...அப்படித்தான் நீ என்ன, குற்றம் செய்யாதவனா?"

"நான் என்ன செய்தேன்? நீ சொல்லியதெல்லாம் செய்தேன்."

"அதற்காகத்தான் உன்னை இப்படி கொண்டுவரச் சொன்னேன்."

"என்ன? நீ சொன்னபடி நடந்ததற்காகவா?"

"சொன்னபடி நடந்ததற்காக அல்ல. நான் சொனனதையெல்லாம் நீ வெளியில் சொல்லிவிடுவாயல்லவா? அதற்காக."

"நான் என்ன உன் இரகசியங்களை வெளியில் சொல்லிவிடுவேனா?"

"இரகசியம் என்பதே ஆபத்தின் சின்னம். அதைப் பிறர் அறிந்துகொள்ளக்கூடாது. அறிந்துகொண்டவர்களை உயிரோடு வாழவிடக்கூடாது. அதற்காகத்தான்..."

"என்னசெய்யப்போகிறாய்?"

"உம் மகளுக்குத் துணையாக உம்மை அனுப்புவதென்று முடிவு செய்துவிட்டேன்."

"ஆ... என் மகளை என்ன செய்தாய்?"

"பரலோகம் அனுப்பிவிட்டேன்."

"ஐயோ! அடபாவி... வஞ்சி... அம்மா வஞ்சி... ஐயோ."

"அலறாதீர்... விரைவில் அவளைக் காணச்செய்கிறேன்" என்று கூறி உருவினான் வாளை! சொருகினான் அவன் மார்பில். சாது பஞ்சநாதன் துடிதுடித்துச் செத்தான்! மச்சநாதன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான்!

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

ந்தது? 'அழகு பிள்ளைகளைப்
பற்ற நமக்கு என்ன இனிக்கவலை'
ன்று கூறிய தாங்கள், அந்தப்
ள்ளைகளையே தவிக்க விட்டுவிட்
செல்ல எப்படித் துணிந்தீர்
அத்தான்!
'அரசியலிலும் எதிர் நீச்சல்
டுகிறேன், வாழ்க்கையிலும்
திர்நீச்சல் போடுகிறேன்" என்று
ருமையோடு சொல்லிவிட்டுக்
ாழைபோல் நடந்துவிட்டீர்களே
த்தான்! 'வாழ்க்கை என்பது'
லை மணத்தை வாரி வழங்கும்
லைமட்டுமல்ல' மணலையும்,
சுதுரும்புகளையும் வாரி இறைக்
புயலும்கூட!' என்று நம் மண
ாவில் கூறிய வாழ்த்தினை
ந்தீர்களா அத்தான்! எங்களை
லாம் நடுத்தெருவிலே—ஆதர
றவர்களாக — அனாதைகளாக
டுவிட்டுச் சென்றுவிட்டீர்களே
த்தான்" — என்று அவன்
வி அமுதா, அவன் இறந்த

உடலை — சில்லிட்டுபோன பாதங்களைக்—கட்டி அழும் காட்சிதனைக் கண்டான்.

இந்தக் காட்சிகளை மனக்கண்ணால் கண்ட நேரத்தில் அவனை யாரோ சாட்டையால் அடிப்பது போன்ற உணர்வு பிறந்தது அவனுக்கு! அடுத்த வினாடி—"ஐயோ! அமுதா! அப்படிப்பட்ட கோழையல்ல உன் கணவன்"—என்று வாய்விட்டுக் கதறிவிட்டான் பொன்னன்!

பக்கத்து மேடையில் தறி நெய்துகொண்டிருந்த அவன் மனைவி அமுதா, கணவனின் கதறலைக் கேட்டு ஓடிவந்தாள்!

"என்ன அத்தான்? உடம்பெல்லாம் ஏன் வியர்த்துக் கொட்டுகிறது? கண்கள் ஏன் நெருப்பாய்ச் சிவந்திருக்கின்றன?"

'ஒன்றுமில்லை அமுதா! ஒன்றுமில்லை!"

"இல்லை அத்தான்! நீங்கள் மனதில் நினைத்த எதையோ சொல்ல மறுக்கிறீர்கள் அத்தான்! சொன்னால்தான் மனக்கவலை தீரும்!"

"அமுதா! நான் ஒருசொற்றொடரைச் சொல்வேன்! அந்தச் சொற்றொடரை முடிக்கவேண்டும் நீ!"

"தேர்வு வைக்கிறீர்களா அத்தான்?"

"ஆம்! தேர்வுதான்!! நம் வாழ்வைப்பற்றிய தேர்வுதான்!"

"என்ன அத்தான் அந்தச் சொற்றொடர்? சொல்லுங்கள்!"

"இங்கிருப்பதைவிட.......?—இந்தச் சோற்றொடரைப் பூர்த்தி செய் பார்க்கலாம்!"

"இறப்பதே மேல்!—என்ற தொடர் பொருந்தும்"

"அப்படி என்றால் இந்த முடிவை ஏற்றுக்கொள்கிறாயா நீ?"

"ஏற்பது இருக்கட்டும் அத்தான், இந்த முடிவுக்கா தாங்கள் வந்தீர்கள்?"

"ஆம் அமுதா! இந்த முடிவில் தான் எனது சிந்தனை என்ற

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15, இல்லம் ...118

துலாக்கோல் முடிவுகாண இப்படியும், அப்படியும் ஊசலாடுகிறது!"

"நீங்கள் கொண்ட முடிவு நேர்மையா அத்தான்? இந்த முடிவுக்கு வர எப்படி அத்தான் உங்கள் மனம் துணிந்தது! நீங்கள் எப்படியாவது போங்கள், என் வரையில் நான போய்விடுகிறேன் என்பது தானே இதன் பொருள்!

அத்தான்! வாழ்க்கையில்—வறுமையின கொடுமையில்—நல்லவாழ்வு அற்ற தன்மையில் — உடையவர்கள் எல்லாம் 'இங்கிருப்பதைவிட...' என்ற தங்கள் சொற்றொடரை எண்ணிப் பார்த்திடின் எத்தனை குடும்பங்கள் அத்தான் மிஞ்சும்? அவர்கள் எல்லாம் தாங்கள் கொண்டமுடிவை நினைத்துக்கூடப் பார்த்ததில்லையே!

அத்தான்! தற்கொலை கோழை ஒருவனின் கடைசிப் புகலிடம் என்பீர்களே! அதை மறந்துவிட்டீர்களா?

தங்கள் மனநிலை எனக்குப் புரிகிறது! புரியாமல் பேசவில்லை! தாங்கள் மனததை ஒரே திசையில் செலுத்துகிறீர்கள்! அந்தத் திசையை மாறறிப்பாருங்கள் — அமைதி கிடைக்கும்!

நம குடுமபம்; நம பெண்கள்; நம் பிள்ளைகள் — குடுமபம் வளமாக இல்லை; பெண்களை வாழவைக்க முடியவில்லை; ஆண்களைப் படிக்க வைக்க முடியவிலலை — எனபதற்காக 'இங்கிருப்பதைவிட்...' எனற முடிவைத தாங்கள தேர்ந்தெடுத்தீர்கள்.

ஆனால்—

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால்—கோட்டையிலே கொலுவீற்றிருந்த கொற்றவன் வீதிக்கு வலம் வந்தான்! கண் இழந்த குருடனைக் கண்டான்; பசியால் துடிக்கும் ஏழை மகனைக் கண்டான்; அறியாமையில, மூடநம்பிக்கையில் மிதக்கும், அப்பாவிகளைக் கண்டான; கையிழந்த, காலிழந்த முடவர்களைக் கண்டான்! இவைகளை எல்லாம் கண்ட நேரத்தில் அவன் உள்ளம் குமுறியது! விழிகள் குருதியைக் கொட்டின! வாழ்வே வெறுப்பாகியது! அந்த நேரத்தில் நாடாளும் நல்லவன் முடிவு கட்டவில்லை அத்தான்! 'இங்கிருப்பதைவிட......' என்ற தங்கள் முடிவை!

மாறாக—

அரசை உதறிவிட்டு — இன்ப மனைவியைப் பிரிந்துவிட்டு,—பாசததை உண்டாக்கும் பெற்ற குழந்தையை மறந்துவிட்டு—பெற்றெடுத்த தாய், தந்தையை விட்டு விட்டு—நாடு வாழ—நாட்டு மக்கள் அறியாமை நீங்க—அவர்கள் வாழ்வு வளம் பெற—காவலன் காவி பூண்டான்! கருத்து வழங்கினான்—சித்தார்த்தன் போதி புத்தனானான்! அவன் கொண்ட கருததைத் தாங்கள் ஏன் அத்தான் மறந்தீர்கள்!

வறுமை வாட்டிய நேரத்தில்—கொடுங்கோன்மை கடுந்தேளாய்க் கொட்டிய நேரத்தில் — அதிகாரம் ஆர்பபரிதத நேரத்தில்—கொடுமைக்கும வறுமைக்கும் ஆளான வேறு வேறு நாட்டு மக்கள் எல்லோரும் — 'இங்கிருப்பதைவிட...' என்ற முடிவைக் கொள்ளவில்லை!

மாறாக—

கொடுமையின் இருப்பிடம் கண்ட; நாட்டு மக்களின நலிவுக்குக் காரணம கூறிய; ஏதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் பெரும் படையில்; ஆணவ ஆட்சியை வீழ்த்த வளரும படையில் அணிவகுததனர்! மக்கள் ஆற்றல் ஒனறு திரண்டது! ஆணவம் ஒழிக! அதிகார வெறியர்கள் ஒழிக! கொடுங்கோன்மை ஒழிக! மக்களை வதைக்கும் கொற்றவன ஒழிக! என்ற முழக்கங்கள் எழுந்தன! எழுச்சி பிறந்தது! மக்கள் அறப்போர் தொடுததனர்! கொடுங்கோன்மைக்குச் சாவு மணி அடித்தனர்! வாழ்வு கண்டனர்! மகிழ்ச்சி கொண்டனர்!

அந்த மக்கள் கண்ட—பெற்ற—நுகர்ந்த—நுகர்கினற நல்வாழ்வை மறந்தீர்களா?

அததான! நாளெல்லாம் பாடுபடுகிறோம், உழைக்கிறோம—நல்வாழ்வு கிட்டவிலலை! இதற்குக் காரணம எனன? இந்தக் கொடுமையை ஒழித்துக் கட்டும் படை எது? அந்தப படையோடு அணிவகுப்போம்! காலம் வரும்! நல்வாழ்வுக்காகப் போராடுவோம்! வெற்றி கிட்டும்!! அந்த வெற்றிக்காக நாம் பலியானாலும்—நமது பிள்ளைகள், நம் சந்ததிகள் வாழும்! தாங்கள் கொண்ட முடிவை மாற்றுங்கள்! நம்மை இந்த நிலைக்கு ஆளாக்கிய கொடுமைக்குக் கல்லறை எழுப்பும் பணியில் ஈடுபடுவோம்!! அதுதான அத்தான் அறிவுடைமை!"

"அமுதா! என்னைக் கொல்லாதே! உன் சொற்கள் ஒவ்வொன்றும் தீயால் சுடுவதுபோல் இருக்கின்றன! கல்லறைக்குச் சென்ற என்னைக் களத்திற்குச் செல்லப் பாதை அமைத்துவிட்டாய்! சமயத்தில் கண்களைத் திறந்துவிட்டாய்! அமுதா! நீ அறிவுக்குன்று! என்னை விடப் பெரியவள் நீ!

"அத்தான்!"

"ஆமாம்! இப்படிப் பேச எப்படிக் கற்றாய்?"

"தாங்கள் படிக்கும் இதழ்கள் கற்றுத் தந்த பாடம் அததான்! தாங்கள் மறந்ததை நான் நினைவுபடுத்தினேன்! அவ்வளவுதான்!

"அமுதா!"

பொனனனின் கரங்கள் இரண்டும் மனைவியின் கரங்கள் இரண்டையும் பற்றின! அமைதி நிறைந்த அந்த இருளில்—பார்வையால் ஒருவரை ஒருவர் உற்று நோக்கிக் கொண்டனர்! அமைதி நிலவியது!

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

வணக்கம், நிகழும் (26—8—60) வெள்ளிக்கிழமை காலை 9-மணியளவில், பெங்களூர், உயர்திரு. பி. தாமோத்ரம் (பாசிங் ஆபிசர், மைசூர் பாங்கு) அவர்களின் மகள், **செல்வி. சுலோச்சனாவை, அண்ணாதுரை** அவர்கள் தலைமையில் சென்னை, புரசைவாக்கம் 'ஆலத்தூர் வில்லா'வில் (495, பூந்தமல்லி நெடுஞ்சாலை) வாழ்க்கைத் துணைவியாக நான் ஏற்கும் பதிவுத் திருமண விழாவிற்கு வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,
டி. கே. பொன்னுவேலு.

காஞ்சீபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.